

# கல்முனை வடக்கு
# ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய
# கும்பாபிஷேக சிறப்பு மலர்



வெளியீடு:

**ஊழியர் நலன்புரிச்சங்கம்**
**பிரதேச செயலகம் - கல்முனை வடக்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை வடக்கு பிரதேச செயலக

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய



# கும்பாபிஷேக சிறப்பு மலர்

## 12-09-2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- ஆசிச் செய்திகள்
- பிரதேச செயலாளர் அவர்களின் பதிவு
- வாழ்த்துச் செய்திகள்
- ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய வரலாறும் வளர்ச்சியும் புனரமைப்பும்
- கும்பாபிஷேக கிரியை உணர்த்தும் தத்துவம்
- இடர் களையும் சித்தி விநாயகர்
- அறுகம் புல்லின் மகிமை
- விநாயகப் பெருமானின் திருவுருவ விளக்கம்
- விநாயகர் வழிபாட்டிற்குரிய இருபத்தியொரு பச்சிலைகளும் அதன் பயனும்
- விநாயகரின் முப்பத்திரெண்டு வடிவங்கள் மற்றும் அதன் தத்துவங்களும்
- விநாயகர் அகவல்
- உள்ளத்தால் உதிக்கும் நன்றிப்பூக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அரனார் திரு மகனார்
ஆணைமுகமுடையோன்
கரமைந்திலங்கும் மொருமருப்பும்
தானிலங்கும் பெருவயிறு
புவனமதில் அடக்கமென உணர்த்தும்
வர சித்தி விநாயகனை வாழ்த்தி
வணங்குவோமே!

திரு மருகுவு கைலாமுறை
சிவனார் திருமகனே
வரு வினைகள் தனை அகற்றும்
வாரணமுகத்தோனே
கருதி வரும் அடியவர்கள் கவலை
வினை தீர்த்தருள்வாய
பெரு வயிறு அழகுபெறு
வரசித்தி விநாயகனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]!

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் இலங்கை மணித்திருநாட்டின் கிழக்குக் கரையில் கல்முனை வடக்கு பிரதேச செயலக வளாகத்தில் ஸ்ரீ வரசித்தி விநாயகராக அமர்ந்து அருள்பாலிக்கும் எம்பெருமானின் மகா கும்பாபிஷேக கைங்கரியத்தை பிரதம குருவாக இருந்து நிகழ்த்துவதற்கு அடியேனுக்கு திருவருள் கிட்டியதை எண்ணி பெருமிதம் கொள்கின்றேன். கும்பாபிஷேகம் எனப்படுவது இந்துக்களின் சமய வழிபாட்டு பெருஞ்சாந்தி எனப்படுகிறது. இப்புண்ணியம் சேர்க்கக்கூடிய மகா வைபவம் ஆவர்த்தனம், அநாவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரீதம் என நான்கு வகையாக பிரித்து செய்யப்படுகின்றது. கும்பாபிஷேக தரிசனம் என்பது நாம் மூன்று ஜென்மங்களில் செய்த பாவங்களை போக்கவல்லது என வேத சாஸ்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது தவிர ஒரு கும்பாபிஷேகத்தை முழுமையாக தரிசனம் செய்பவர்கள் பன்னிரு வருடங்கள் தினந்தோறும் ஆலயம் சென்று வழிபட்ட பலாபலன்களை அடைவார்கள். என ஆகமங்கள் கூறுகின்றது.

பிரபஞ்சம் எங்கும் பரந்து காணப்படும் சக்தியை எதிர்மறையாற்றல். நேர்மறையாற்றல் என வகைப்படுத்தலாம். நன்மை தரக்கூடிய நேர்மறையாற்றலை ஐந்திரம், மந்திரம், தந்திரம் என்னும் முறைகளினால் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனப்படும் . உலக இயக்கத்தின் பிரதான காரணிகளான பஞ்ச பூதங்களால் உள்ள நேர்மறை ஆற்றல் தரக்கூடிய மூலக்கூறுகளை அஸ்ட மாயாசித்துக்களின் மூலமும் சிவாகம முறைப்படி பிரித்து சிவாச்சாரியர் தன்னுடன் இணைத்துக்கொண்டு பின் அக்கினியில் இணைத்து பின்னர் கும்பத்தில் இணைத்து மந்திர பூர்வாங்க நாடியுடன் இணைத்து பிம்பத்தில் இணைத்து புனித நீராட்டல் கும்பாபிஷேகத்தின் சுருக்கமான விளக்கமாகும்.

இவ்வகையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஸ்ரீ வரசித்தி விநாயகருக்கு குடமுழுக்கு 31-08-2020 நடைபெற இருக்கிறது. இந்நாள்முதல் ஆலயத்தில் நடைபெறும் நித்திய நைமித்திய பூசைகளில் அடியார்கள் கலந்து சகல நலன்களையும் தரவல்ல ஸ்ரீ வரசித்திவிநாயக பெருமானின் திருவருளை நிறைவுற பெற்று இன்புற்று வாழ்வீர்கள் என இறை அன்போடு ஆசி வேண்டி ஆசிச் செய்தி பகர்கின்றேன்.

*பிரதிஸ்டா பிரதம குரு :*

*ஆரிய பாஷா விறபன்னர், சிவாச்சார்ய சிரோன்மணி, ஈசான சிவாச்சாரியார்,*

**சிவஸ்ரீ க.கு. சச்சிதானந்தசிவம்** (குருக்கள்)

**ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



கல்முனை வடக்கு பிரதேச செயலக வளாகத்தில் ஸ்ரீ வரசித்தி விநாயகர் வந்தமர்ந்துள்ளார். மிக்க மகிழ்ச்சி. சில வேளைகளில் தெய்வ சக்தியை அசுர சக்தி ஆட்டிப்படைத்து இறுதியில் தெய்வ சக்தியே வெற்றிபெறுகின்றது. இதை எமது புராண இதிகாசங்கள் மூலம் அறியமுடிகின்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக வளாகத்தில் ஸ்ரீ வரசித்தி விநாயகர் வந்தமர்வதற்கு சில காலம் அசுர சக்தி தடையாக இருந்தது. தற்போது எம்பெருமான் அவற்றையெல்லாம் வென்று இந்த வளாகத்தில் வந்தமர்ந்துள்ளார். இந்நிகழ்வு எம்பெருமானின் மெய்க்கீர்த்தியாகும். இனிமேல் இந்த காரியாலயத்தில் எம்பெருமானின் திருவருள் நிறைந்து நின்று கல்முனை வடக்கு பிரதேசங்களுக்கும் பிரதேச செயலக செயற்பாட்டிற்கும் நல்லன செய்யும் என்பதில் ஐயப்பாடு இல்லை.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களின் ஊக்கமும் செயற்பாடுகளுக்கும் நன்மை பெறும் வண்ணம் ஸ்ரீவர சித்தி விநாயகரை பிரார்த்தித்து கொண்டு எனது நல்லாசியை வழங்குகின்றேன்

- சுபம் -

*சித்தாந்த ஞானபானு,*
*சிவாகம கிரியா ஜோதி,*
**சிவ ஸ்ரீ க.கு. சீதாராம் குருக்கள்**
*பிரதம குரு ஸ்ரீமுருகன் தேவஸ்தானம்,*
*உகந்தைமலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலாளர் அவர்களின் பதிவு...



இலங்கை மணித்திரு நாடானது சைவமும் தமிழும் தழைத்தோங்கியிருந்த நாடுகளுள் சிறப்பானது. அந்த வகையில் இந்நாட்டின் தெற்கே தமிழர் பெருமைகளுடன் வரலாற்று சிறப்பு மிக்க கல்முனை நகரிலே அமையப் பெற்றுள்ள கல்முனை வடக்கு பிரதேச செயலக வளாகத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் கண்டிருக்கும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக சிறப்புமலர் வெளியீட்டில் காலச்சுவடுகளாக எனது பதிவினையும் பதிவிடுவதில் மனநிறைவடைகின்றேன்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகமானது இலங்கையின் நிருவாக செயற்பாட்டு ரீதியாக சவால்களும் சட்ட ரீதியான சிக்கல்களும் நிறைந்த ஒன்றாக காணப்படுகின்றது. இச்செயலகம் 1989 ஆம் ஆண்டு பிறிதொரு கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு மிகமோசமான வளப்பற்றாக் குறைகளுடன் செயற்பட்டு வந்தது.பின்னர் பல்வேறு தரப்பினரின் முயற்சிகளின் பலனாக 2010 ஆம் ஆண்டு தற்போதைய இடத்தில் புதிய அலுவலக கட்டிடமொன்று அமையப்பெற்றது.இதில் முன்னாள் பிரதேச செயலாளர்களான திருமதி.பி.தர்சினி, திரு.வ. வாசுதேவன் ஆகியோரின் முயற்சிகள் முக்கியத்துவமிக்கதாகும். புதிய அலுவலக கட்டிடத்தில் பணிகள் ஆரம்பிக்கப்படும் காலகட்டத்தில் திரு.க.லவநாதன் அவர்கள் பிரதேச செயலாளராக கடமையாற்றியிருந்தார்.

அக்காலப்பகுதியில் கடமையாற்றிய அலுவலக உத்தியோகத்தர்கள் தங்களது ஆன்மீக தேவைக்காக சிறிய பிள்ளையார் சிலை ஒன்றினை செயலக வளாகத்தினுள் வைத்து வழிபட்டு வந்திருந்தனர்.அவ்வேளை முன்னாள் பிரதேச செயலாளர் திரு.க.லவநாதன் அவர்களது முயற்சியின் காரணமாக அலுவலக உத்தியோகத்தர்களின் கருத்துக்கள், ஆலோசனைகளுடன் 2018ம் ஆண்டு நிரந்தரமான சிறிய ஆலயம் ஒன்றினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதற்காக அலுவலக உத்தியோகத்தர்கள் பலர் தங்களது பங்களிப்புகளை நல்கியிருந்தனர். அத்துடன் சில நலன் விரும்பிகளும் முன்வந்து தமது பங்களிப்புக்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய பணிகளை முன்னெடுத்து செல்கையில் குறித்த கட்டிடம் சட்டவிரோதமானது என காரணம் காட்டி அதை உடைத்தகற்றும் கோரிக்கையுடன் கல்முனை மாநகர சபை முதல்வரினால் 2018 ஒக்டோபர் மாதத்தில் கல்முனை நீதவான் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது (வழக்கு இல: MCK/92057/PVT) அதன் காரணமாக கட்டுமானபணி இடை நிறுத்தப்பட்டது. அப்போது அமரர் உயர் திரு.சீ. ஜெயரூபன் அவர்கள் புதிய பிரதேச செயலாளராக கடமைகளை பொறுப்பேற்றிருந்தார். குறித்த வழக்கு அவரை உளவியல் ரீதியில் வெகுவாக பாதித்திருந்தது என்பதை அவர் என்னுடைய நண்பன் என்ற வகையில் அவருடனான கலந்துரையாடல்கள் மூலம் என்னால் அறியக் கூடியதாக இருந்தது. பின்னர் அன்னாருக்கு ஏற்பட்ட நோய் காரணமாக 2018 டிசம்பர் மாதத்தில் இறைபதம் எய்தினார். அவர் நோய்வாய்ப்பட்டிருந்த காலகட்டத்தில் இவ்வாலயம் எப்படியேனும் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்ற ஆர்வமும் பிரார்த்தனையும் அவருக்குள் வெகுவாக இருந்ததை என்னால் அறிய முடிந்தது.

பின்னர் நான் பிரதேச செயலாளராக கடமைகளை பொறுப்பேற்ற பின் 2019 பெப்ருவரி மாதத்தில் குறித்த வழக்கு எனக்கெதிராக மீண்டும் தாக்கல் செய்யப்பட்டது. (வழக்கு இல: MCK/93076/UDA) தொடர்ச்சியான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குப் பின்னர் 2020.06.02 ஆம் திகதி குறித்த வழக்கை தள்ளுபடி செய்து நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதற்காக நான் சட்டமாஅதிபர் திணைக்களத்தின் உதவியை நாடியிருந்தேன். இருந்தபோதிலும் சட்டத்தரணி திரு.என். சிவரஞ்சித் அவர்கள் தாமாகவே முன்வந்து வழக்கு விசாரணைகளின் போது தோன்றி வாதாடி அவ்வழக்கு வெற்றியடைவதற்கு முக்கிய காரணமாக செயற்பட்டார். அவருடன் சேர்ந்து சட்டத்தரணி திருமதி. எம். ஆர்த்திகா மற்றும் சட்டத்தரணி திரு.ரீ. மதிவதன் ஆகியோரும் தமது பங்களிப்பினை வழங்கியிருந்தனர். அதற்காக அவர்கள் எதுவித பிரதிபலனையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதற்காக பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம் சார்பாக அவர்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து அலுவலக உத்தியோகத்தர்களது ஆக்க பூர்வமான கருத்துக்கள் மற்றும் பங்களிப்புக்களை மீண்டும் பெற்று நிறுத்தப்பட்டிருந்த நிர்மானப் பணிகளை ஆரம்பித்து அதனை பூர்த்தி செய்து தற்போது கும்பாபிஷேக குடமுழுக்கினையும் சிறப்புற நிறைவேற்றியுள்ளோம்.

எங்கும் நிறைந்துள்ள இறைவனை ஆலயங்கள் மூலம் மக்களிடம் மையப்படுத்துவது எம்மனைவரினதும் கடமையாகும். ஒருபசுவின் உடம்பில் பால் பரந்து காணப்பட்டாலும் அதன் முலையூடாகவே அது கிடைக்கும் என்பதைப் போல இறை என்பதும் உலகெங்கும் பரந்திருந்தாலும் ஆலயத்தினூடாகவே அவனது சக்தி மக்களுக்கு சிறப்புற சென்றடையுமென சான்றோர் எடுத்தியம்பியுள்ளனர். ஆலயங்களை காண்கின்ற போதெல்லாம் இறைவனைப் பற்றிய எண்ணங்கள் எம்மிடையே தோன்றுகின்றது. இதன் மூலம் சீர்பெறு மனிதனாக ஒவ்வொருவனும் நல்வழி நடக்க முயல்வான் என்ற சிந்தனையின் வெளிப்பாடுகளுள் ஒன்றாகவே வழிப்பாட்டிற்கு பொருத்தமான இடங்களில் எல்லாம் வழிபாட்டிடங்கள் அமையப் பெற்றுள்ளன. அந்த வகையில் எமது வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயமானது அலுவலக உத்தியோகத்தர்களது தனிமனித ஒழுக்கம், சமூகநல்லிணக்கம், பண்பாடுசார் விடயங்களை பின்பற்றல் என்பவற்றை வளர்த்தெடுப்பதுடன் இறைசாட்சியுடனான திறன்மிக்க கடமைகளை மக்களுக்கு வழங்குவதற்கான சக்தியினை கொடுக்கின்ற இடமாக காணப்படும் என்பதுடன் சேவை நாடி வரும் மக்களுக்கு மனஆறுதலை பெற்றுக்கொள்ளும் இடமாகவும் அமையும் என்பது எமது நம்பிக்கையாகும்.

இவ்வாலய வழிபாட்டுடன் தொடர்புடைய செயற்பாடுகள் அலுவலக கடமைகளை பாதிக்காதவாறும், செயலகத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகளை எந்த விதத்திலும் பாதிக்காத வகையிலும், சேவைநாடிகளை அசௌகரியங்களுக்கு உள்ளாக்காதவாறும், ஏனைய மதங்களைச் சார்ந்த சகஉத்தியோகத்தர்களின் உணர்வுகள் மதிக்கப்படத்தக்க வகையிலும், ஒற்றுமையுடனும், அமைதியுடனும் இடம்பெற வேண்டுமென அனைத்து இந்துமதத்தைச் சார்ந்த உத்தியோகத்தர்களையும் அன்புடன் கண்டிப்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆலயத்தின் கட்டுமானப்பணிகள் மற்றும் கும்பாபிஷேக நிகழ்வு என்பவற்றினை திறன் பட நடாத்துவதற்கு பலவகைகளிலும் உதவிகளை வழங்கிய பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,கிராம,மாதர் கிராம அபிவிருத்திச்சங்கங்கள், பொதுஅமைப்புகள், நலன்விரும்பிகள், ஆலய திருப்பணிக் குழுவினர் எனஅனைவருக்கும் இந்த சிறப்பு மலரின் ஊடாக எனது நன்றிகளை தெரிவித்து கொள்வதுடன் அனைத்து கருமங்களும் சிறப்பாக நிறைவேற வழியமைத்த எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை பிரார்த்தித்து விடை பெறுகின்றேன்.

*"என் கடன் பணிசெய்து கிடப்பதே."*

**ரீ.ஜே. அதிசயராஜ்**
*பிரதேச செயலாளர்,*
*கல்முனை வடக்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக வாழ்த்துச் செய்தி



மனிதர்களை நல்வழிப்படுத்தும் மார்க்கங்களாகவே மதங்கள் காணப்படுகின்றன. இனம், மதம், மொழி என்ற அடிப்படையில் மனிதன் தனக்குள் வேறுபட்டு நிற்பினும் இறைவன் அனைவருக்கும் பொதுவானவராகவே காணப்படுகின்றார். வையகத்தில் மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கு இறை பக்தியும் மதங்கள் காட்டுகின்ற ஒழுக்க நெறியும் அவனுக்கு துணை நிற்கின்றன.

அரச சேவையினை வழங்குகின்ற உத்தியோகத்தர்களின் மனதில் இறைபக்தியும் அவர்களிடத்தில் நல்லொழுக்கமும் காணப்பட்டால் அவர்களால் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளும் சிறப்பானதாக அமையும். இறைபக்தியினையும் நல்லொழுக்கத்தினையும் ஏற்படுத்துவதில் வணக்கத் தலங்கள் மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இந்த வகையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயமும் அங்கு தொழில்புரியும் அரச உத்தியோகத்தர்களிடையே இறைபக்தியினையும் நல்லொழுக்கத்தினையும் ஏற்படுத்துவதாக அமைகின்றது தவிர அப்பகுதி மக்களுக்கும் அங்கு பாதையில் பிரயாணிப்பவர்களுக்கும் அருள்பாலிப்பவராக ஸ்ரீ வரசித்தி விநாயகர் காணப்படுகின்றார்.

எனவே அங்கு கடமை புரியும் அரச உத்தியோகத்தர்களிடத்தில் இறைபக்தியை வளர்த்துக் கொள்வதிலும் நல்லொழுக்கத்தினை ஏற்படுத்துவதிலும் பொதுமக்கள் நலன் கருதி உத்தியோகத்தர்களால் ஆற்றப்படும் கருமங்கள் சிறப்பாக அமையவும் அவை வெற்றியளிப்பதற்கும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் எப்பொழுதும் துணை நிற்பார் என்ற நம்பிக்கையோடு அந்த "கணபதி தெய்யோ" வுக்காக நடாத்தப்படுகின்ற கும்பாபிஷேகத்துக்கு எனது இதய பூர்வமான வாழ்துக்களை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**டி.எம்.எல் பண்டாரநாயக்க**
*மாவட்டச் செயலாளர்,*
*மாவட்டச் செயலகம் - அம்பாறை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக விழா சிறப்புறட்டும்



ஆலயங்கள் ஆன்மா வைக்கின்ற இடம் - கோயில்கள் இறைவன் குடியிருக்கின்ற இடம். அந்த அடிப்படையில் கோயில்கள் அமைகின்ற இடமும் அதன் சூழலும் தூய்மை அடைகின்றன. ஒவ்வொருவரது மனதையும், எண்ணங்களையும், தூய்மைப்படுத்துகின்றது. இன்று கல்முனை வடக்கு பிரதேச செயலக வளாகத்தில் அமையப்பெற்றிருக்கின்ற ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயமானது பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் அங்கு தினமும் சேவை நாடி வருகை தருகின்ற பொதுமக்களுக்கும் இறையுணர்வை ஏற்படுத்தும் நோக்கில் அமையப் பெற்றிருக்கின்றமை சிறப்புடையதாகும். அவ் அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவரும் தங்கள் கடமைகளை தினமும் ஆரம்பிப்பதற்கு முன் ஆலய வணக்கம் ஒன்றைச் செய்து ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருப்பது சிறப்பானதாகும். இந்துசமயம் சொல்லும் தத்துவமான விக்கினம் தீர்க்கும் விக்கினேஸ்வரனை வணங்கி தொடங்கும் எந்தவொரு நற்காரியமும் வெற்றியளிக்கும் என்பதற்கு அமைய அலுவலக, அலுவலகம் சார்ந்த பொது மக்களுக்கும் நன்மையளிக்க கூடிய நற்காரியங்கள் அனைத்தும் வெற்றியைத் தேடித் தரும் என்பதில் ஐயமில்லை. இறைசிந்தனையும் இறைபயமும் எம்மை சிறப்பான நேர்மையான புனிதமான சேவையை செய்யத் தூண்டும். ஆன்மீக உணர்வு எம்மை செம்மைப்படுத்தும். இந்த நோக்கங்களுக்காகவே இவ்வாலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதை அனைவரும் உணர்ந்து பயன்பெறவேண்டும். மேலும் மதங்கள் வணக்கஸ்தலங்கள் அனைவரிடத்திலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அனைவரும் சமாதானத்துடனும் இணக்கப்பாட்டுடனும் வாழ வழிகாட்டும் மூலங்களாகும். இதில் இனமத பேதங்கள் இல்லை. எனவே நாம் அனைவரும் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஒன்றிணைந்து வாழும் சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறுகின்றன. இவ்வாலயம் ஒன்றை அமைப்பதற்கு முன்னின்று உழைத்த கல்முனை வடக்கு பிரதேசசெயலாளர்கள், உத்தியோகத்தர்கள் , பொதுமக்கள் அனைவருக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்வதோடு இக்கும்பாபிஷேக விழா சிறப்புற நடைபெறுவதற்கு எல்லாம் வல்ல ஸ்ரீ வரசித்தி விநாயகப்பெருமானை வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**வே. ஜெகதீசன்**

*மேலதிக மாவட்ட செயலாளர், அம்பாறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய வரலாறும் வளர்ச்சியும் புனர்அமைப்பும்

மனிதன் தன் வாழ்க்கையினை தொடங்கிய காலப்பகுதியிலிருந்தே "இறை" என்கின்ற சக்தியினை மையப்படுத்தியதாக ஒழுங்கமைத்திருந்தான். தன்னுடைய செயல் வடிவங்கள் அனைத்திற்கும் மேலான சக்தி ஒன்றின் வழிகாட்டல் உள்ளதாக அவன் உணர்ந்திருந்தான். இதனை ஒட்டியதாகவே மக்கள் அமைவிடங்கள் உள்ள பகுதிகளில் வழிபாட்டுத் தலங்கள் பல அமைந்து காணப்படுகின்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயமும் மேற்சொன்ன விடயங்களை உள்ளடக்கியதாகவும் அலுவலக உத்தியோகத்தர்களது சமய சமூக பண்பாட்டு விடயங்களையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தெடுக்கும் ஓர் நிலையமாக தோற்றம் பெற்றது. 2010 ஆம் ஆண்டு இவ்வளாகத்திற்கு கல்முனை வடக்கு பிரதேச செயலகம் இடமாற்றம் செய்யப்பட்டிருந்த போது அக்காலப்பகுதியில் கடமையாற்றிய அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவராலும் ஆலயம் அமையப் பெற்றிருக்கும் இடத்தில் சிறு சிலை ஒன்றினை வைத்து வழிபாட்டினை மேற்கொண்டு வந்திருந்தனர். இந்துக்களின் விஷேட தினங்களின் போது விஷேட வழிபாடுகளும் ஏனைய தினங்களிள் வழிப்பிள்ளையாரை வணங்குவது போன்ற வழிபாட்டு முறைகளும் இடம் பெற்று வந்திருந்தது. இக்காலப்பகுதியிலே பிரதேச செயலாளராக கடமையிலிருந்த திரு.க.லவநாதன் அவர்கள் இவ்விடத்தினில் ஆலயம் ஒன்றினை அமைப்பதற்கான எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டு அலுவலக உத்தியோகத்தர்களது கருத்தறியும் கலந்துரையாடல்களையும் கூட்டி அதன் மூலம் பெறப்பட்ட அனுமதி ஊடாக ஆலய கட்டுமானப்பணிகளை முன்னெடுத்து இருந்தார்.

ஆலய திருப்பணிகள் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் நலன்விரும்பிகளது பங்களிப்புடன் மிக வேகமாக நடைபெற்று வந்த வேளையில் பிரதேச செயலாளர் திரு.க.லவநாதன் அவர்களுக்கு பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் என்பன கிடைக்கப் பெற்றிருந்தது. இதன் பின்னர் பிரதேச செயலாளராக அலுவலக பணிகளைப் பொறுப்பேற்றிருந்த திரு.சீ.ஜெயரூபன் அவர்கள் ஆலய திருப்பணிகளை தொடர்ந்து முன்னெடுத்திருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் போது சிலரது செயற்பாடுகளால் ஆலய திருப்பணிகள் தடைப்பட்டதுடன் கல்முனை மாநகர சபையின் முதல்வரால் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம் என்ற அடிப்படையில் கல்முனை நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இவற்றினை எதிர்கொண்டு தனது கடமையினை முன்னெடுத்திருந்த வேளையில் பிரதேச செயலாளர் திரு.சீ. ஜெயரூபன் அவர்களது இயற்கை யெய்திய நிகழ்வானது பெரும் சோகமான விடயமாக அமைந்தது. இவற்றில் இருந்து மீண்டு ஆலய பணிகளை தொடர்ந்து செயற்படுத்தும் விதமாக புதிதாக 2019 ஆம் ஆண்டு நியமனம் பெற்றிருந்த பிரதேச செயலாளர் திரு.ரீ.ஜே.அதிசயராஜ் அவர்கள் தமது பங்களிப்பினை பூரணமாக வழங்கி இருந்தார்.





அதன் முதல் கட்டமாக நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முறையான ஒத்துழைப்பு வழங்கியதுடன் முறைப்பாட்டாளர்களது குற்றச்சாட்டுக்களை சட்டத்தரணிகளான திரு. என். சிவரஞ்சித், திருமதி. எம். ஆர்த்திகா, திரு. மதிவதன் ஆகியோரது பங்குபற்றுதலுடன் எதிர்கொண்டு தீர்வினையும் பெற்றிருந்தார். பின்னர் ஆலய திருப்பணிகளை அலுவலக உத்தியோகத்தர்களது சம்மதத்துடன் மிக விரைவாக முன்னெடுத்து கடந்த 29-08-2020 ஆம் திகதி தொடக்கம் 31-08-2020 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் எம்பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் இடம் பெற்றிருந்தது. இவ்வாலயத்தில் மூலமூர்த்தியாக சித்தி விநாயகர் எழுந்தருளியுள்ளதுடன் வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசைகளும் ஏனைய தினங்களில் சாதாரண பூசை நிகழ்வும் இடம் பெறுவதுடன் விநாயகரின் விசேட தினங்களில் சிறப்பு பூசைகளும் வருடத்தில் ஒரு நாள் வருடாந்த உற்சவ நிகழ்வும் நடைபெறும் விதமாக பூசை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறாக கல்முனை வடக்கு பிரதேச செயலக வளாகத்து ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயமானது பல்வேறு காலகட்டங்களில் பல இடர்பாடுகளை எதிர்கொண்டு அவற்றிலிருந்து மீண்டும் புதுப்பொலிவுடன் மிளிரும் வகையில் அமைக்கப்பட்டு அலுவல உத்தியோகத்தர்கள் மாத்திரமன்றி பிரதேச மக்கள் அனைவருக்கும் அருள்பாலிக்கும் புனித தலமாக மிளிர்கின்றது.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**<br>**பிரதேச செயலகம் - கல்முனை வடக்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக கிரியை உணர்த்தும் தத்துவம்

அனாதி மலமுத்த சித்துருவாகிய பரம்பொருள் கற்பனை கடந்த சோதியாகினும் அனாதி மலபெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கிப் போக மோட்ஷங்களை அடைய ஆலயத்தில் நிறுவப்படும் விநாயகரை திருவுருவில் கருணையே உருவாகும் படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாம்

கும்பாபிஷேகம் என்பது குடமுழுக்கு "குட நன்நீராட்டு விழா" என்றும் சொல்லுவார்கள். இது பிரதிஸ்டை என்றும் கூறப்படும். இது நான்கு வகைப்படும். அவையாவன

01. ஆவர்த்தம் 02. அனாவர்த்தம்
03. புனராவர்த்தம் 04. அந்தரீதம்

**ஆவர்த்தம்** :- புதிதான ஓர் இடத்தில் விநாயகரை வைத்து பாலப்பிரதிஸ்டை செய்து பூஜித்து புதிதாக கோயில் கட்டி, பாலாலய மூர்த்தியை கும்பத்தில் எடுத்து பின்னர் மூலஸ்தானத்தில் இருக்கும் மூர்த்தியில் சேர்த்து அபிஷேகம் செய்வதாம்.

**அனாவர்த்தம்** :- வெகு காலத்துக்கு முன் கோயில் கட்டி. பூஜையில்லாமல் அழியவிட்டும் சீர் குலைந்தும் இருந்து, முன்போல் அவைகளை திருத்தி ஆலயம் கற்பித்துக் கும்பாபிஷேகம் செய்தலாகும்.

**புனராவர்த்தம்** :- கர்ப்பக்கிரகம், விமானம், பிரகாரம். கோபுரம், பலிபீடம், முதலியவைகளிற் பழுது ஏற்பட்டாலும், அட்டபந்தனத்தில் பழுது உண்டானாலும், விமானத்திலுள்ள விக்கிரகத்தில் பழுது நிகழ்ந்தாலும், வர்ணம் அழிந்து இருந்தாலும், பாலாலயம் செய்து ஆலயத்தை புதுப்பித்து மூலஸ்தானத்தில் பிரதிஸ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தலாம்.

**அந்தரீதம்** :- ஆலயத்தில் சோரன் சண்டாளன் , நாய் முதலியன உட்சென்று தீண்டியதன் காரணமாக மூர்த்தியின் பிரத்தியங்கம், உபாங்கம் போன்றவைகளில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அவைகளை திருத்தி உடனே செய்வதாகும் இதில் அந்தரித பிரதிஸ்டைக்கு நாள், நட்சத்திரம் பார்க்க வேண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இனி கும்பாபிஷேகத்தின் முக்கிய பகுதிகளையும் அவற்றிற்கான விளக்கங்களையும் நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுஞ்ஞை** :- இறை வணக்கம் செய்து சர்வசாதகரிடத்திலும், விநாயகரிடத்திலும் நாள் குறித்த காலத்தில் இந்த மகத்துவமான கும்பாபிஷேகத்தை செய்ய உத்தரவு தர வேண்டும் என்று வணங்கி உத்தரவு கேட்பதாம்.

**தனபூஜை** :- புண்ணிய வசத்தால் கிடைத்த திரவியத்தை பூஜை செய்தலாகும்.

**திரவியவிபாகம்** :- பூஜை செய்த திரவியத்தை ஒருபாகம் ஆலய கட்டட வேலைக்கும் இரண்டாவது பாகம் நித்திய பூஜைக்கும், மாதாந்த விசேட நட்சத்திர பூசை, உற்சவம், ஆபரணாதிகட்கும், இராமாதி வாங்கவும், மூன்றாவது பாகத்தை பதினொரு பாகம் செய்யவும் வேண்டும்.

**ஆசாரிய வர்ணம்** :- பிரதான ஆசாரியரையும் சர்வ சாதகரையும் வணங்கி இத்திரவியத்தை கொண்டு மகா கும்பாபிஷேகம் செய்து இறையருளைப் பெற்றத்தர வேண்டும் என்று எஜமான் குருவை வழிபடுதல் ஆகும்.

**கணபதி பூஜை** :- எவ்வகையினராயினும் விநாயகரை முதலில் வழிபாடு செய்தல் வேண்டும். செய்யாவிடில் அவர்களின் காரியத்தை இடையூறு செய்! என்று இறைவன் கட்டளை என்பது "என்னரே ஆயினும்" என்ற திருவிளையாடல் புராணத்தில் விளங்குகின்றது. ஆகவே இங்கு தொடங்கிய மகாகும்பாபிஷேகம் இடையூறின்றி நிறைவேற விநாயக பெருமானுக்கு பூஜை, அபிஷேகம், கோமம் செய்து முதலில் பிரதான சிவாச்சாரியர் வழிபடுதல்.

**கிராம சாந்தி**

"சர்வலோக இதம் புண்ணியம்
வட்சியே கந்து சடாணன்
கிராம நூதன காலேது
க்ஷேத்திரவா மந்திரேவிபா
பிரதிஸ்டோத்துவ காலேச
பூஜாம் கருத்துவாவிசேஷவதா" என்று காரணாமாம் கூறுகிறது. இவ்வாறு சகலலோக சுகத்திற்கும், புதிதான பட்டினம் கிராமங்களிலுள்ள அசுர, இராட்சத பிசாச, பிரமராட்சதர்களை திருப்பி செய்து சந்தோசப்படுத்தி கிராம அதிதேவதையான வைரவரை பூஜித்தல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரவேசபலி** :- நாம் பிரவேசம் செய்து மகா கும்பாபிஷேகம் செய்யும் இடத்தில் உள்ள எட்டுத்திக்குகளிலும் வசிக்கின்ற இயக்கர், இராட்சதர், பிசாசர், பிரமராட்சதர், பூதர், காளி, சரளி, வைரவர் முதலிய தேவதைகளுக்கு உணவு கொடுத்து எழுப்பி அவர்களை முறையே கடல், மலை, வனம், நதி, மயானம் முதலிய இடங்களுக்கு சென்று சுகமாய் வீற்றிருங்கள் இது இறைவன் கட்டளை என கூறி திருப்தி செய்தலாம். இது மகாகும்பாபிஷேகம், திருவிழா, புது வீடு குடிபுகல் போன்ற காரியங்களில் செய்ய வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன

**திசாஹோமம்** :- நான்கு திக்குகளிலும் முறையே பாசுபதாஸ்தம், அகோராஸ்திரம், பிரத்தியங்கிராஸ்திரம், சிவாஸ்திரம் முதலியவர்களை பூசித்து காவல் செய்யும்படி கட்டளை இடுதலாம்.

**இரட்சோக்கிர ஹோமம்** :- அசுர, ராட்சகர்களின் தொல்லை நீங்குவதற்காக மூன்று மேடைகள் அமைத்து நடுவில் கும்பம் வைத்து அதில் இரட்சோக்கிரக தேவதையை வடவாமுகானிக்கு சமமாக பாவித்து பூஜை செய்து அதன் தென்புறத்தில் வெள்ளை வஸ்த்திரம் இட்டு தேங்காய் ஒன்று வைத்து வடக்குப்பக்கத்தில் சிவப்பு வஸ்த்திரம் வைத்து அதன்மேல் வாள் ஒன்று வைத்து தேங்காயில் சிவனையும் வாளில் கட்கேஸ்வரனையும் வாளைச்சுற்றி அசிதாங்க பைரவர், குரு பைரவர், சண்ட பைரவர் முதலிய எண்மரையும் பூசித்து அவர்களுக்க உள்ள திரவியங்களாலும், சமித்தாலும் ஹோமம் செய்து சம்யோசித்துக் கும்ப ஜலத்தை ஆலயத்தில் தெளித்தலாம்.

**ஆயுஸ் கர்மம்** :- குருமார் செய்து கொள்ளும் தசவித ஸ்நானமாம்

**நவக்கிரகம்** :- கும்பாபிஷேகத்தால் உலகத்துக்கு அதிக மழையாலும், மழையின்மையாலும் ,விரோதிகளாலும்,துஸ்டர்களாலும் வரும் துன்பம் நீங்கவும் ,எல்லாப்பிணிகளின் பயம்,நோய்,பிணி நீங்கவும் சூரியன் முதலிய நவக்கிரகங்களை பூசித்து வணங்கி ஹோமம் செய்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாஸ்து சாந்தி** :- பூமியானது அசத்தாக ஜட சம்பந்தமுள்ளதனால் அதை நீக்கிச் சத்தாக உண்டாவதற்கு செய்வது. அசுத்தசொரூபமான பூமியை பாலாக்கினியால் தகிர்த்தப் பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் மூச்சுக்காற்றினால் சோதி ரூபமாக்கி சுத்தம் செய்வதாகும். நீற்றுப்பூசணிக்காயை பூமியின் வடிவமாக தியானித்து அதன் விதைகளை அண்டங்களாக நினைத்து எல்லாவற்றையும் ஹோமம் செய்து பின் பூமிக்கு அதிபதியான பிரம்மாவின் கட்டளையினால் பரிசுத்தமானதாக பாவித்தல் வாஸ்த சாந்தியாம் இச்சாந்தியினை கும்பாபிஷேகம் பாலஸ்தாபனம், யாகமண்டப கல்பனம், கோபுரம், தடாகம், வீடு, உற்சவம் போன்ற இடங்களில் அவசியம் செய்ய வேண்டும்.

**கோ பூஜை** :- பசு மாடு,கன்று கட்டுதலாகும்.

**விற்பிரபோசனம்** :- வேதமறிந்த பிராமணர் "பிருதுவி முதல் சுத்தத்துவம் வரையுள்ள எல்லா தத்துவங்களையும் சுத்மாக்குகின்றேன் ஹோமம் செய்கின்றேன் இது நன்கு சுத்தியடையட்டும் என்று சிதாக்கினியில் ஹோமம் செய்கினற பாவனையில் போசனம் செய்வித்தலால் அந்த இடம் சுத்தியாகும்

**மிருத்சங்கிர இணம்** :- கிராமத்தக்கு சாந்தியையும் தேச நன்மையடைவையும் நினைத்து பூமாதேவியை பிரார்த்தித்து இந்தப்பூமி கண்டங்களாக பிரிந்திருப்பதால் ஒவ்வொரு கண்டத்துக்கும் பூஜை செய்து பிரார்த்தித்து யானை யாகம் செய்ய முளையிடுவதற்காக மண்வெட்டியை சிவாஸ்திரமாக பூஜித்து பூமா தேவியின் வயிற்றில் மூன்று அல்லது ஐந்து முறை மண்ணை எடுத்தலாம். எடுத்த தோஸம் நீங்க அந்த இடத்திற்கு வேற மண் போட்டு சப்த வாரிதி கும்பத்தால் அபிஷேகம் செய்தலாம்.

**அங்குரார்ப்பணம்** :- முளையிடுதல், இந்த பூமியானது முன்னர் அமிர்தத்தால் நனைந்து சுத்தமானது. ஆகையால் உலக சேமத்தின் பொருட்டு நெல் முதலிய நவதானியங்களை பாலில் ஊறவிட்டு "ஓசதி சூக்தம்" செபித்து சந்திரனை வணங்கி முளையிடுதலாம்.

**ரஸாந்தனம்** :- காப்புக்கட்டுதல் குழந்தையின் வருத்தம் தீர மாதா மருந்துண்ணுதல் போல உலக சேமத்திற்காக ஆசாரியர் எடுத்த காரியம் செவ்வனே நிறைவேற இடையூறுகள் தடுக்கா வண்ணம் இறைவியின் கர்ப்ப நாடியில் நின்றும் உண்டானதாக நாகராஸனை பூஜித்து கையில் காங்கணம் கட்டுதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரத்தினநியாசம், நைனோன்மீனனம், தானியாதிவாசம் சயனாரோகணம், கிராமபிரதட்சணம்** :- இவைகள் புதிதான மூர்த்திகளுக்கு பஞ்ச பூதம் சம்பந்தமான தத்துவங்கள் ஏற்படுத்துவதற்காக செய்யப்படும் கிரிகைகளாம் அன்றியும் இறைவன் "இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியுங் காற்றுமாகி" என்ற தேவாரத்தில் இருந்து இறைவடிவத்தை உண்டுபண்ணும் குறிப்பை உணர்த்துவதுமாகும்.

**யாகசால தானியாதி ஸ்தாபனம்** :- யாகசாலையிற் சப்ததாதுக்கள் மயமான சப்த தானியங்களை பரப்புதல்.

**சூரிய காந்தி சங்கிரகணம்** :- ஞானக்கினிக்கு சூரிய காந்தத்தில் இருந்து அக்கினி எடுத்தல்.

**ருத்விக் சாதகாதி வரணம்** :- பிரதான குண்டத்தைத் தவிர ஏனைய குண்டங்களுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் ஏற்ற குருமாரையும் சாதகர்களையும் உபசாதகர்களையம் நியமித்தல்.

**பிரசன்ன அபிஷேக பூஜை** :- எங்கும் நிறைந்த மூர்த்தியைப் பூஜிப்பதற்காக தமக்கு நேர்முகப்படுத்தல்.

**கடஸ்தாபனம்** :- குடத்தை சுத்தமாக்கி சப்த தாதுக்களும் ஜீவனும் உண்டாக்குவதற்காக கும்பத்தில் அடியில் ஆத்ம தத்துவத்தையும் பிரம்மாவையும் கும்ப நடுவில் வித்யா தத்துவத்தையும், விஸ்ணுவையும் கும்ப நுனியில் சிவதத்துவத்தையும் ருத்திரனையும் கும்பத்தில் நவசக்திகளையும் மூவிளை நூலிற் சரஸ்வதி இலக்குமி, ரௌத்திரி ஆகியோரையும் கும்பத்திற்கு பிடிக்கப்படும் தூபத்தில் அக்கினி சக்தியையும் தீர்த்தத்தில் கங்கை முதலிய புண்ணிய நதிகளையும் மத்தியில் வருணனையும் நவரத்தினங்களில் வாமை முதலிய நவசக்திகளையும் தங்க தாமரை பூவில் சதாசிவத்தையும் வாசனை திரவியங்களில் ஸப்த மாதுக்களையும் பூசித்து குடத்தில் இட்டு மாவிலையைச் சடையாகவும் தேங்காயை சிரசாகவும் கூர்ச்சத்தை முடியாகவும் வஸ்திரத்தை தோலாகவும் ஜெஞ்ஞோப வீரத்தைப் பஞ்சப்பிரம மந்திரமாகவும் பூசிப்பதால் கும்பமானது சர்வதேவதா சொரூபமாகிறது என்று ஆகமங்கள் கூறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாகர்சணம்** :- கலைகளை இருத்தலாம் சடத்துவன்னியாசமும் கும்பத்திற்கு செய்ய வேண்டும். சடத்துவானது பரமேஸ்வரர் இருக்கும் ஸ்தானத்தை அடைதலுக்கு உரிய வழியாகும். இதில் சர்வ வியாபகராக உள்ள பரமேஸ்வரர் இந்த ஆறு அத்துவாக்களில் கலந்தும் இருக்கிறார். பரமேஸ்வரர் சக்தி சொரூபர் அதித சக்திக்கும் சக்தனுக்கும் பேதமின்மை ஆதலால் அங்காங்கிபாகம் என்றும் கூறப்படுகின்றது. ஆகவே சக்தியின் இடத்தில் இருந்து கலையும் கலையில் இருந்து தத்துவமும் தத்தவத்தில் இருந்து புவனமும் புவனத்தில் இருந்து வர்ணமும் வர்ணத்திலிருந்து பதமும் பதத்தில் இருந்து மந்திரமும் உண்டாகின. கலையில் தத்துவம் அடங்கியுள்ளதால் தத்துவம் முதல் மந்திரம் இறுதியாக ஒன்றில் ஒன்று அடங்கி இருந்து திரும்ப வந்ததாதலின் இந்த கடத்தவாக்களை செய்ய வேண்டும் என்பதாம் அன்றியும் கலாநியாசத்தால் சர்வஞ்சசத்தியும், தத்துவ நியாசத்தால் நித்திய திருப்தியத்துவமும், பவன நியாசத்தால் அனாதி போதத்தவமும், வர்ண நியாசத்தால் சுபதந்திரத்தவமும், பத நியாசத்தால் அலுப்த சக்தித்தவமும், மந்திர நியாசத்தால் அநத்த சத்தியத்துவமும், சித்திக்கின்றமையால் அவசியம் செய்ய வேண்டும்.

**யாகசாலை பூஜை** :- யாகசாலை கலாமயமாக விளங்குகின்றது நிவிர்த்தி முதலிய நான்கு கலைகளும் நான்கு பக்க நிலைகளாகும். இதற்கு நான்கு கலசமும் இவைகளுக்கு இருபுறங்களிலும் நந்தி முதலிய எண்மர் வாயிற் காப்பாளராகவும் கிழக்கு முதல் அட்ட திக்குகளில் கீழ் மேல் ஆகிய பத்து திசைகளில் இந்திரன் முதல் விஸ்ணு ஈறாக தசலோக பாலகர்களும் அக்கினிக்கு வடக்கில் சிவ சூரியனும் நிருதிக்கு கிழக்கில் யாகபலனைத்தரும் வாஸ்து பிரம்மனும் வாயுவிற்கு தெற்கில் உத்தமபாகமண்டப ரூபமாகிய மகாலக்மியம் வாயுவின் வலது புறத்தில் யாகத்தில் ஏற்படும் விக்கினங்களை தீர்க்கும் விநாயகரும் ஈசானத்திற்கு மேற்கில் எதையும் உத்தரவு கேட்டுச்செய்ய சதாசிவம் முதல் சப்த குரு மூர்த்திகளையும் பூசிப்பதற்கு இருபத்தேழு கலசங்கள் வைத்த ஞானவாள் ஏந்தியபடி யாகேஸ்வரன் யாகேஸ்வரியையும் கலசத்தில் அமைத்த நவகுண்டலங்களோடு விளங்குகின்றமையால் யாக சாலை கலாமயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவகுண்டம்** :- சிவபெருமானுக்கு சொரூபம் தடத்தம் என இரு வடிவங்கள் உள்ளன சொரூபத் திருமேனி சுயப்பிரகாசத் திருமேனியாகும். அது உலகத்தை கடந்த வடிவம். தடத்த வடிவம் என்பது உலகத்தோடு கலந்த வடிவம் ஆகும் இந்த உலகம் நிலம் நீர் நெருப்பு காற்று நீள் விசும்பு நிலா பகலோன் இயமானன் என்னும் எண்வகைப்பொருளிலும் கலந்தது இதனால் இறைவனை எண்வகை உருவில் வைத்து வணங்க வேண்டும் என்பது பெற்றாம்.

**நிலம்** :- பிருதுவியாகும் இது சதுர வடிவம் அதைக்குறிப்பது கிழக்கு திக்கில் அமைந்த நாற்கோண வடிவமான குண்டமாகும்.

**நீர்** :- அப்பு இதன் வடிவம் பாதி சந்திரனான பிறை வடிவம் அது தெற்கிலுள்ள பிறை வடிவமான குண்டமாகும்.

**நெருப்பு** :- தேயு இதன் வடிவு முக்கோணம். இது தென்மேற்கு மூலையிலுள்ள முக்கோண வடிவம்.

**வாயு** :- இது அறுகோண வடிவம். இது வடமேற்கு மூலையில் அமைந்திருக்கிறது.

**ஆகாயம்** :- இது வட்ட வடிவினது. மேற்குதிக்கிலுள்ள குண்டத்தில் அமைந்துள்ளது.

**சூரியன்** :- இது தாமரைப்பூ வடிவம் இது வடக்குத்திக்கில் அமைந்திருக்கிறது.

**சந்திரன்** :- இது எண்கோண வடிவினது. இது வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இயமானன் எனும் ஆன்மா மாயா தத்தவத்தை குறித்து அரசிலை வடிவாய் தென்கிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது இவை எட்டுத்திக்கிலும் அமைய ஈசானத்திற்கும் கிழக்கிற்கும் மத்தியில் வட்டவடிவமான பிரதான குண்டத்தில் சுயம்பிரகாச மூர்த்தியை அமைந்துள்ளதுதான் இறைவடிவம். இறைவன் மேலே கறித்த எட்டு வடிவமாகிய உலகத்தில் கலந்திருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அவரை இந்த எட்டு வகையான குண்டத்தில் வைத்து பூஜித்து ஓமம் செய்து வணங்குகின்றோம். இது எப்படி எனில் நமது அரவமான உயிரை உருவமான உடம்பில் வைத்து அனுமானித்து காண்பது போல இறைவனை வழிபாடு செய்தலே நவகுண்டங்களின் அமைப்பாம். இன்னம் ஈசானம் முதல் சத்தியோசாதம் இறுதியாக உடைய பஞ்சப்பிரம மந்திரங்களும் மூல மந்திரமும் சிவபெருமானுடைய எல்லாம் அறியும் தன்மை, வரம்பில் இன்பமுடைமை, இயல்பாகவே பாசங்களில் நீங்கிய தன்மை, தன்வயத்தலாகும் தன்மை, பேராறிவுடைமை, பேராளுடைமை, அளவில் ஆற்றலுடைமை, தூய உடம்பினன் ஆதல் முதலிய எண்குணங்களும் பிரதான குண்டத்தில் இறைவனுக்குப் போல் அமைந்து விளங்கும். மேலும் பிரதான வேதிகையில் அமைந்தாசனம் முதல் உள்ள ஆசனங்கள் மேல் சர்வ தேவதா சொரூபமான இறைவனை வைத்து வணங்கும் இடம் சிறந்த யாக சாலையாம்.

**பதவின்யாசம் :-** மூலஸ்தானத்து இறைவனை ஸ்தாபிக்க ஏற்படுத்தும் இடத்தைக் குறிக்கும் இதை "ஆசார்யசில்பின சார்த்தம், பிறவி சேர்கர்ப கேகம்" என்ற காரணாகம விதிப்படி, ஆசார்யரும் சிற்ப சாஸ்திரியும் சேர்ந்து சிவன், அம்மாள், விநாயகர் முதலிய மூர்த்திகளைப் பிரதிஸ்டை செய்வதற்குரிய இடத்தை வகுத்தலாம்.

**ஸ்தூபிஸ்தாபனம் :-** அதிஸ்டானம் முதல் (பட்டிகை) ஸ்தூபிவரி யந்தமும் முறையே ஆறு அத்துவாக்களும் அமைய தூல லிங்கமானதாக அமைந்த பத்மத்தின் மேல் வைத்தலாம்.

**தீபஸ்தாபனம் :-** இறைவன் சோதி வடிவினன் அவனை சோதி வடிவாக வணங்குவதற்காக வைக்கப்படுவது தீபஸ்தாபனமாம் "இல்லக விளக்கது இருள் கெடுப்பது... நல்லக விளக்கது நமச்சிவாயவே" என்னும் தேவாரம் இங்கு நினைவு கூறத்தக்கது.

**இரத்தினஸ்தாபனம் :-** நவரெத்தினம், நல்லோகம் முதலிய வஸ்துக்களை ஆரோக்கிய வீரிய, பிரபாசக்திமயமான திரவியங்களை பீடத்தில் மேலிட்டு இந்திராதிலோக பாலகர்களை பூஜித்து பத்மாசனம் வரை பூசித்தல் இரத்தினஸ்தாபனம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயந்திரஸ்தாபனம் :-** கோடுகளும் கோணங்களும் இறைவனின் மூலபிரசாத மந்திரங்களும் எழுதி பூசிக்கப்பட்ட யந்திரத்தை உரிய இடத்தில் வைத்தலாம் இது இறைவனுக்கு அருள் சக்தியை ஊட்டுவதாம்.

**பிம்பஸ்தாபனம் :-** மூர்த்தியை முறைப்படி வைத்தலாம்.

**அஸ்டபந்தனம் :-** இறைவனின் அம்சமாகிய அஸ்டமூர்த்திகளின் அருள் பெற்று அணிமாதி அஸ்டசித்திகளும் சித்தியடைந்த நிலையில் ஞானகிரியா சக்தியாகும். சங்கநிதி பதுமநிதி இரண்டும் தோன்றி பரம்பொருளின் ஆணையால் சாம்ராட்சிய லக்ஷ்மியும் அதிலிருந்து பயன்தரும் வகையில் தனலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, வித்யாலக்ஷ்மி, கீர்த்திலக்ஷ்மி, சௌபாக்யலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, ஜெயலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி, ஈறாக அஸ்டலக்ஷ்மிகளும் உருக்கொண்டு உயிர்களை உய்விக்கும் வண்ணம் உள்ள கதிகளை தருவது அஸ்டபந்தன சமர்ப்பணமாம்.

**சொர்ணபந்தனம் :-** தங்கத்தால் செய்வது

**தைலாப்பியங்கம் :-** விநாயகருக்கு தைலத்தினால் (எண்ணெய்) ஆசாரியரும் சிற்ப சாஸ்திரியாரும், அன்பர்களும் சாத்துதல். அன்பர்கள் தங்களிடத்திலுள்ள ஆணவமல சம்பந்தத்தாலும், திரிகரணங்களாலும் ஏற்படும் குற்றம் நீங்கி சுத்தியடைதல் பொருட்டு எள்ளில் இருந்து எடுக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெயை சுவர்ணத்தினால் தொட்டு இறைவனின் சிரசு, கண்கள், மூக்கு, செவி, தொப்புள், பாதம் முதலிய எல்லா அங்கங்களும் குளிரும் படி நிறையச்சாத்துவதாகும்.

**பிம்பசுத்தி :-** தீட்சாயினர்கள் முதலானோரால் பரிசிக்கப்பட்ட போசு நீக்கத்திற்காகவும் உஸ்ண சாந்திக்காகவும், பிம்பத்திற்கு சுத்தம் உண்டாவதற்கு உதகம், கந்தம், புஸ்பம், பத்திரம், காசாயம் மிருத்தி, பீஜம், பல்வலம், இரத்தினம், லோகம், தாது அஸ்திரம், ஔசதி, கவ்வியம் குசம், சிருங்கம் முதலிய பதினாறு வகையான திரவியங்கள் நிரம்பிய கலசங்களைப் பூஜித்து ஓமம் செய்து பின்னர் மூர்த்திக்கு முறைப்படி பஞ்ஞாமிர்தாதி முதலியவைகளால் அபிஷேகம் செய்து அலங்கரித்துப் பூசித்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரம்பிரஷாந்தனம் :-** கும்பாபிஷேக நிமித்தம் மூர்த்திகளுக்கு காப்புக் கட்டுதலாம்.

**பூர்வ சந்தானம் :-** மூர்த்திக்குப் பக்கத்தில் ஆசாரியர், சாதகர் உட்கார்ந்து ஆதார சக்தி முதல் பஞ்சமா வர்ணம் வரை பூசித்து, கலைமுதல் மந்திரம் இறுதியாக சாங்கோபாங்கமாக அவையவ பேதங்களால் பிம்பத்திற்கு தர்ப்பை நுனியால் நியாசம் செய்தலாம்.

**விசேட திரவிய ஹோமம்:-** இறைவனை அக்கினி வடிவில் பூசித்தலாம் சகலவிதமான ஹோமத்திரவியங்களை இறை மயமாக்கி அதற்குரிய மந்திரங்களோடு பஞ்ச பிரம்ம மந்திரமும் வியர்கிருதியம் சேர்த்த சொல்லி அக்கினியில் ஹோமம் செய்தலாம்.

**ஸ்பரிசாகுதி :-** யாகத்தில் உள்ள மூர்த்தி, மூர்த்தீஸ்வரன், மந்திரம் ஆகியவைகளை பூசித்து ஹோமம் செய்த முறைப்படி மூல மூர்த்தியிடம் சென்று அந்தந்த ஸ்தானங்களை முறையே தொடர்பு படுத்தலாம்.

**ஸ்ரோத்திர வந்தனம் :-** ஆசாரியார் மூர்த்திபர்கள் செய்த தொடர்புகளை கூடுதல், குறைதல் ஏற்பட்டால் அவைகளை கருணையினால் பூர்த்தியாக்கி அருள் செய்ய வேண்டும் என்று பிராத்தித்தலாம் .

**ஆசார்ய பூஜை :-** குருமாருக்கும் சர்வ சாதகர்களுக்கும் உடை உத்தரியம் உஸ்னீசம் உருத்திராசம், மோதிரம், விபூதிப்பை முதலிய உபசாரங்கள் கொடுத்து மகிழ்வித்தலாம்.


**அக்கினி சமயோஜனம் :-** பிரதான குண்டத்தில் பூஜை செய்து எடுத்த அக்கினி மூர்த்தி முதலானவைகளை பிரதான ஆச்சாரியர் மூலம் குண்டத்தில் சேர்த்தலாம்.

**பூரணாகுதி :-** ஓமத்தை பூர்த்தி செய்வதற்காக செய்யப்படும் கிரியை

**தீபாராதனை :-** சோடசோபசார விசேட பூஜையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேதகோசம் :-** வடமொழி வேதம் முதலியன ஓதல், தமிழ் வேதம்.

**ஸ்தூபிகும்பாபிஷேகம் :-** விமானங்களில் உள்ள ஸ்தூபிக்கு அபிஷேகம் செய்தல்.

**மகாகும்பாபிஷேகம் :-** அர்ச்சகர், ஸ்தானிகர் ஒருவரை நந்தி கணத் தலைவராக பூஜை செய்து அவருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து அலங்கரித்து அவரது சிரசின் மேல் பிரதான குடத்தை வைத்து சர்வ சாதகர், பிரதான குரு, மூர்த்திபர்கள் முதலியோர் கம்பத்தை தொட்டுக்கொண்டு எஜமான்கள், பக்தஜனங்கள் சூழ்ந்து புஸ்பாஞ்சலி, வேதம், தேவாரம், தோத்திரம், சங்கு, மங்கல வாத்தியம், பேரி, மணி முதலிய வாத்திய கோசங்களுடன் பஜனை செய்து பக்தியுடன் மெதுவாக வீதி வலம் வந்து மூவாலயம் சென்று ஆசனத்தின் மீது கும்பங்களை வைத்து கும்பத்திற்கும் மூர்த்திக்கும் நாடி சந்தானம் செய்து தொடர்பேற்படுத்தி உரிய முகூர்த்தத்தில் இறைவனை ஆவாகணம் செய்து மூலமந்திரம் உச்சரித்து பதமந்திரத்துடன் பக்தர்கள் ஹர ஹர என்ற சத்தம் முழங்க வேத சிவாகம தேவார புராண திருமறைகளை பக்தர்கள் ஓத சகல வாத்திய ஷோசங்களும் ஒலிக்க மகாகும்பாபிஷேகத்தை செய்து எஜமானர்களும் சகல ஜீவராசிகளும் உய்தி அடைய பிரார்த்தித்து செய்வது கும்பாபிஷேகமாகும். வர்தனி கும்பத்தை ஆவடையாருக்கும் வித்தியேசுவர கடும்பங்களை ஆவடையாரை சுற்றிலும் அபிஷேகித்து மகா நைவேத்திய உபசாரம் செய்து அகண்ட தூபம் வைத்து பிரார்த்தித்த பின்னர் தேவர்களின் பூஜைக்காக மூன்றே முக்கால் நாளிகைக்கு கதவை சாத்தி வைக்கவும்.

**தசதர்சனம் :-** கதவை திறந்து பசு, ஆச்சாரியர். வேதபாராயணர், கண்ணாடி, பூரண கும்பம், தீபம், கன்னிகை, சன்னியாசி, சுமங்கல், எஜமான் பக்தசனம் முதலியோரை சகல வாத்திய உபசாரங்களுடன் தனித்தனியே தரிசிக்க செய்தல்.

**பிராயச்சித்த ஆகதி :-** இத யாகத்தில் செய்வது.

**ஆசார்ய உற்சவம் :-** குரு வழிபாடு.

**எஜமானுக்கு பலப்பிராப்தி :-** எஜமானுக்கு கும்பாபிஷேக பலனை ஒப்புவித்தல் இன்னும் இதைப்பற்றிய விரிபுகள் அநேகம். அவையெல்லாம் விளிப்பிற் பெருகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர் களையும் சித்தி விநாயகர்



ஓம் எனும் பிரணவத்தில் இருந்து வேதங்கள் தோன்றின. அப்பிரணவமே எல்லாத் தேவைகட்கும் பிறப்பிடம். உலகத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் பிரணவ மந்திரமே காரணமாகும். பிரணவ சொரூபமாக திகழ்பவர் விநாயகர். இன்று எம் மக்களிடையே விநாயகர் வழிபாடு மிக உன்னத நிலை பெற்றிருப்பதைக் காணலாம்.

தம்மை வழிபடும் அடியார்களின் உள்ளக்கு முறலையும் இன்னல்களையும் மிக எளிதில் வந்து தீர்க்கும் கடவுள் விநாயகர் என்பது மக்கள் நம்பிக்கை. ஆற்றங்கரை ஓரத்திலும், அரசமர நிழலிலும் தெருவோரங்களிலும் வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்ப்பவர். இவர் சிவனின் சக்தி அம்சமாக தோன்றிய ஒரு மூர்த்தமே. அதனால் "சிவகுமாரர்" என்றும் கூறப்படுவார். ஆயினும் சிவ சொரூபமன்றி வேறல்லர்.

நாம் தொடங்கும் எந்தக் கருமமும் இனிதே நிறைவேறும் பொருட்டு விநாயகர் அருளை வேண்டி வழிபடுவது தொன்றுதொட்டு இருந்து வரம் அனுஸ்ட்டான மரபாகும். தம்மை அன்பால் வழிபடும் அடியார்களின் குறைகளையும் துன்பங்களையும் நீக்குங் கடவுள் என்பதால் அவரை விக்கினேஸ்வரர் எனும் நாமத்தால் வழிபடுகின்றோம். விநாயகர் குறை தீர்க்கும் கடவுள் என்பதனையும் அவரை அன்புடன் பூஜித்தால் பெறற்கரிய பேறுகளை பெறலாம் என்பதனையும், அவரின் அருள் பெற்ற ஔவையார் "கோடாயுதத்தால் கொடுவினை களைந்து" என்ற விநாயகர் அகவல் பாடல் அடியாலும், "கண்ணினாலான வெங்கரி பிடித்தடக்கிக் கருகினேற் குருகையு மாக்கும்." என்ற தணிகை புராணத் திருவாக்காலும் அறியலாம். மற்றெல்லாக் கடவுளருக்கும் நிலத்தில் விழுந்த இலைகளும் மலர்களும் பூஜைக்கு உதவாதனவாகும். ஆனால் பிள்ளையார் விரும்புவது யாவரும் மிதித்து நடமாடும் புல்லாகிய அறுகம்புல்லாகும். ஒரு அறுகம்புல்லை இட்டு வழிபட்டாலே போதும். இது தன்னை அன்புடன் வழிபடுவோருக்கு எளிதில் வந்து இன்பப் பேற்றை அளிப்பவர், அடியார் மனக்குறைகளை எளிதில் போக்குபவர் என்பதையே சுட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது துன்பங்களுக்குக் காரணம் நாம் செய்த வினை. மற்ற மூர்த்திகள் வினைகளை தீர்ப்பார் ஆனால் விநாயகரே வினைகளின் வேரையே களைந்தெறிவார். செடியை வெட்டினால் மீண்டும் வேரில் இருந்து செடி முளைக்கும். அது போல வினையை களைந்தால் மீண்டும் வினை வந்து சேரும். வேரை அகழ்ந்தெடுத்து விட்டால் செடி முளைக்க வாய்ப்பில்லை அல்லவா? அது போல வினைகளின் வேரை அகழ்ந்தெடுக்கும் கடவுளாக விளங்குகின்றார் விநாயகர். இதனை கபிலதேவ நாயனார். முத்த நாயனார் திருவிரட்டை மணி மாலையில் நோக்கப்பாலது.

**"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே**
**விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினால்**
**கண்ணிற் பணிமின் கனிந்து"**

விநாயகர் குறை தீர்ப்பவர் என்பதை சில வரலாற்று கதைகளும் எடுத்துக் கூறுகின்றன. உதாரணமாக கஜமூகாசுரன் கதையைக் கூறலாம். அவன் சிவனிடம் வரம் பெற்ற ஆணவத்தால் தேவர்களையும் முனிவர்களையும் கொடுமைப்படுத்தினான். தன்னை காணும் போதெல்லாம் தோப்புக்கரணம் போடப்பணித்தான். இதனால் துன்பமும் துயரமும் அடைந்த தேவர்களும் முனிவர்களும் கயிலைநாதரிடம் முறையிட அவரின் இருள் நோக்கால் விநாயகப் பெருமான் கஜமுகனுடன் அவனை அழித்து தேவர்களதும் முனிவர்களதும் மனக்குறையை தீர்த்து மகிழ்வுறச்செய்தார். இதனால்தான் விநாயகருக்கு தோப்புக்கரணம் போட்டு வழிபடல் மரபாயிற்று எனலாம். இது எமக்கு அறிவு வளர்ச்சியையும் உடல் நலத்தையும் உண்டாக்கும்.

மேலும் ஒரு பொழுது இந்திரன் தவம் செய்து கொண்டிருந்தான் மழையின்மையால் பூமரங்களெல்லாம் வாடி வதங்கின சிவ பூஜைக்குத் தேவையான மலர்களைப் பெறமுடியவில்லையே என மனத்துயரமடைந்தான்.மனக்குறை போக்கும் கடவுளல்லவா விநாயகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அவன் அப்பெருமானையே நினைத்தான். அவ்வேளை குறுமுனியாகிய அகத்தியர் சிவனின் கட்டளைப்படி வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்கு கங்கைத்தீர்த்தமடங்கிய கமண்டலத்துடன் வருகை தந்து தங்கியிருந்தார். இதனை உணர்ந்த விநாயகர் இந்திரன் குறைபோக்க திருவுளம் கொண்டார். காக வடிவெடுத்து அவ்விடம் சென்று கமண்டலத்தின் மீது அமர்ந்து கொண்டார். கமண்டலத்தில் காகம் அமர்ந்திருப்பதை கண்ட அகத்தியர் அதனை துரத்தலானார் காக வடிவில் இருந்த பிள்ளையார் கமண்டலத்தை தட்டிவிட்டுப் பறந்துசென்றார். அத்தீர்த்தம் காவிரி நதியாகப் பெருக்கெடுத்தோடியது. தேவந்திரன் சிவ பூஜையை மகிழ்வுடன் செய்தான். மனக்குறை தீர்ந்து பூரிப்படைந்தான். எனவே விக்கினம் தீர்க்கும் விநாயகர் வேண்டுவோர் வேண்டுவதை வழங்கும் வள்ளலன்றோ.

திருநாளைப் போவாரின் வரலாறும் குறைதீர்க்கும் விநாயகப்பெருமானின் கருணையையே மெய்பித்து நிற்கின்றது. ஆதனூரில் வாழ்ந்த இவர் திருப்பூன் கூர் இறைவனைத் தரிசனம் செய்யச் சென்றார். அங்கு மேற்குத் திசையில் ஒரு குட்டையைக் கண்டார். அக் குட்டையை குளமாக வெட்டினால் யாவருக்கும் பயன்படும். என்று விருப்பங்கொண்டார். ஆனால் அதற்கான பணமோ ஆளோ இல்லை. இதற்காக அவர் விநாயகப்பெருமானை நினைத்து மனக்கவலை உற்றார். அடியார்க்கு எளியவரான விநாயகர் அவர் குறை தீர்க்கத் திருவுள்ளங் கொண்டார். கூலியாளாக வந்து ஐந்து படி நெல்லை கூலியாகப் பெற்று நீண்டதொரு குளத்தை வெட்டி முடிக்கின்றார் எண்ணம் செயல் என்பன துய்மையானதாகவும் இறையர்ப்பணமாகவும் இருப்பின் இறைவன் தானே வந்து துயர் துடைப்பான் என்பதையே இச்சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது.

அதுமட்டுமா சேந்தனாரை வேந்தன் விலங்கிட்டுச் சிறை வைத்தான். இதனால் அவரது குடும்பத்தை வறுமை வாட்டியது. இதானால் கவலையுற்ற பட்டினத்தடிகள் சிவனை வேண்டிப்பாடினார். சிவனின் அருட்பார்வையை பெற்ற விநாயகப்பெருமான் சிறை வரை சென்று தும்பிக்கையை நீட்டி கம்பிகளை மடமடவென ஒடித்து பந்து போல் சேந்தனாரை தும்பிக்கையால் தூக்கி பட்டினத்தார் முன் வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சேந்தனாரின் சிறை நீங்கி பட்டினத்தாரை ஆட்கொண்ட கடவுள் விநாயகர் தும்பிக்கையானை நம்பிக்கையோடு வழிபட்டால் நிச்சயம் எமது குறைகளையும் களைவார் என்பது திண்ணம்.

விநாயகர் கருணைக்கடல் கிருபாநிதி தயாசாகரம், இருட்பெருங்குன்றம் பசுவின் சாணம், மஞ்சள் மா, அறுகம்புல் என்பனவே அடையாளம். ஒரு அறுகம் புல் இட்டு வணங்கி வழிபட்டாலே போதும். அவர் எளிதில் வந்து அருள்தருவார்.

முடிவாக நோக்கும் போது குறை தீர்க்கும் கடவுள் என்றபடியால் விநாயகர் கோயில் இல்லாத ஊரே இல்லை எனலாம். ஓர் ஊரில் பல ஆலயங்களும் அமைந்துள்ளன. விநாயகர் வழிபாட்டினால் நம்பிக்கையுடையோர் இயற்கையாக அமைந்த கற்களைக்கூட விநாயகப்பெருமானாக வழிபடுவதைக் காணலாம். கதிர்காமத்தில் முத்துலிங்க சுவாமி கோயிலில் இத்தகை நிலையே காணப்படுகின்றது. எனவே சைவர்களாகிய நாம் விநாயகப்பெருமானை வழிபட்டு எமது குறைதீரப்பெற்று நிறைவு பெறுவோமாக.

**"களியானைக் கன்றைக் கணபதியை செமபொன்**
**ஒளியானை பாரோர்க்குதவுதல் - அளியானைக்**
**கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்று அவன்**
**தாள் நண்ணுவதும் நல்லார் கடன்"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுகம் புல்லின் மகிமை



மக்கள் நல்லொழுக்க நன்னெறியில் நின்று நன்மையடைய வேண்டும். இதற்கு இறைவனின் துணை வேண்டும். எவ்வுயிர்க்கும் துணையாக நிற்கும். கடவுளை வணங்கி நலமடையவே சமயங்கள் ஏற்பட்டன. கடவுள் அருள் பெற்ற மெய்யடியார்கள் இவர்கள் தங்கள் நாட்டின் கல்வி, அறிவு, ஒழுக்கம், வழக்கம், விருப்புக்களுக்கேற்ப சமயங்களை ஏற்படுத்தினார்களே தவிர அவரவர் மதம் உயர்ந்தது எனப் பெருமைப்படுத்துவதற்காக அல்ல என்பதை நாம் அனைவரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

மக்களின் உலகியல் வாழ்க்கையை ஆன்மீகம், தெய்வீகம், தார்மீகம், நிறைந்ததாக மாற்றுவதுதான் சமயம்.மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தல் வாழ்வாங்கு வாழ்தல் என்பன சமயம் சமூகத்தை சாரும்போதும் சமுதாயம் சமயத்தை சாரும் போதும் தான் எட்டப்படும் என்பது தான் இந்து மதத்தின் குறிக்கோள். அதனால் தான் இந்துமதம் எந்த மதத்தையும் இகழ்வது மில்லை-இழிவுபடுத்துவதுமில்லை மேலாக யாரையும் மதம் மாற்ற நினைப்பதுமில்லை.

பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனை தெய்வமாகவும் மாற்றுவது இந்துமதம். அதனால் தான் இந்துக்களின் வாழ்வியலும் சமய நெறியும் இரண்டறக் கலந்துள்ளது .இந்து என்பதற்கு "இரக்கமுடையவன்" என்பது பொருள். அதனால் தான் ஒரு இந்து தன்னுயிர் போல் மன்னுயிரையும் மதிக்கின்றான். ஆமாம் 'நெல்லும் உயிர் நீரும் உயிர்-புல்லும் உயிர்-பூடும் உயிர்" என்பது இந்துக்களின் கோட்பாடு.

இந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவம் அன்பும், ஜீவகாருண்யமுமேயாகும். இதனையே திருமூலர் "அன்பே சிவம்" என்று அடித்துக் கூறுகின்றார். ஆம் இந்துக்களின் சமய நெறி அன்பின் வடிவமாக இறைவனைக் கண்டு அன்பின் வழியாக இறைவனைக் காட்டுகின்றது. இந்த அன்பை வளர்க்கவே வாழ்வியலை இல்லறம், துறவறம் எனும் இரு நிலைகளில் வைத்துள்ளது, இந்து தர்மம். திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமான் சிவ புராணத்தில்,'புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" எனப்பாடுகின்றார் புல் உயிருள்ளது. அதிலும் அறுகம் புல் புனிதமானது. இது ஓரிடத்தில் முளைத்து கொடிபோல் நீண்டு ஆறு இடத்தில் வேரூன்றிக் கிளைக்கும் தன்மை வாய்ந்தது. "அறுகுபோல் வேரூன்றி" என்பது பழமொழி இந்த அறுகை அர்ச்சித்தால் மூலாதாரத்தில் விளங்கும் விநாயகர் ஆறு ஆதாரங்களிலும் பொருந்தச் செய்வார். அருள் புரிவார் என்பர் ஆன்றோர்.

பிரணவப் பொருளாய் அமைந்தவர் பிள்ளையார், "ஓம்"என்பது பிரணவ மந்திரம், ஒடிந்த கொம்பில் இருந்து தான் பிரணவச் சுழி; ஆரம்பிக்கின்றது. இது தான் ஓங்காரம்; இந்த ஓங்கார வடிவமே விநாயகர் இவரை சாதாரண வடிவிலும் வழிபடலாம். கோமயம்(சாணம்) - சந்தனம், சர்க்கரை, மா என்பவற்றைப் பிடித்து அதன்மேல் அறுகம்புல்லை வைத்தும் பூசிக்கலாம்.

பக்தி நெறி, ஞான நெறி இரண்டிலும் பணிவு; முக்கியமானது. இது, நான்; எனும் அகங்காரம் அற்ற நிலை, மற்றைய எல்லாத் தெய்வங்களுக்கும் நிலத்தில் விழுந்த பூக்கள், பத்திரங்கள் பூசைக்கு உகந்ததல்ல. ஆனால் பிள்ளையார் விரும்புவது பூமியில் முளைத்த புல்லாகிய அறுகாகும். அதிலும் ஒரே காம்பில் மூன்று கவருடைய அறுகுதான் விநாயகார் அர்ச்சனைக்குரியதாகும். ஏன் தெரியுமா எடுத்த காரியங்களில் விக்கினமின்றி வெற்றிபெற விரும்புவோர், மனம், வாக்கு, காயம் எனும் மூன்றையும் அடக்கி ஒரே சிந்தனையில் இருத்தல் வேண்டுமென்பதே இதன் தத்துவம் என்கிறது சைவசித்தாந்தம்.

எங்கள் சைவசித்தாந்தங்களின் படி உயிர்கள் உடலை விட்டுப் பிரிந்தவுடன் தாம் செய்த வினைகளுக்கேற்ப, வேறு உடலை அடையும் பொருட்டு, "முதலில் புல் நுனியைப் பொருத்தி பசு வயிற்றில் புகுந்து சாணம் வழியாகப் பயிர்களோடு பரவி புருஷ கர்ப்பத்தில் தாங்கும்" என்பது உபநிஷத வாக்கியமாகும் .இதன்படி உயிர்கள் புல் நுனியில் தங்குவதே முதற்படி ஆதலால், முன்னைமுதற் பொருளாகிய மூத்த கணபதிக்கும் அறுகம்புல், அர்ச்சனை உகந்ததாகின்றது. "புல்லாகிப் பூடாய்" எனும் மணிவாசகர் வாக்கும் இங்கு நோக்கத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகு அற்புதமானது, சொற்பதங்கடந்தது. அது புனிதமானது மட்டுமல்ல, மருந்துவமானது, முக்கியமான மூலிகையும் கூட, பற்பல நோய்களுக்கு அற்புதமான மருந்து சுரம், சூடு, கபம் (சளி) முதலியவற்றுக்கு அறுகுக்கசாயம் அருந்துவார்கள். அறுகு இரு வகைப்படும். பாலறுகு யானையறுகு என்பனவே அவையாகும். பாலறுகுதான் அர்ச்சனைக்கும் அனைத்துக்கும் ஏற்றது. அதன் பெருமையும், அருமையும் அளப்பரியது. அதை விளக்கப் பல கதைகள் உண்டு. ஒன்று...

இந்திராதி தேவர்களை உண்ண நினைத்த எமன் மகனாகிய அனலாசுரனை ஒரு சமயம் விநாயகர் விழுங்கி விட்டார். அதனால் அவர் உடலெங்கும் வெப்பம் எழுந்து அவரும், மக்களும், முனிவரும், தேவரும் வேதனைப்பட்டனர். அந்த வெப்பம் தணிய சந்திரன் அமுதம் கொட்டினான்: சித்தி, புத்திகள் தமது குளிர்ந்த உடம்பால் ஒற்றினார்கள்: திருமால் குளிர்ந்த தாமரையால் தடவினார்: வருணன் குளிர்ந்த நீரினால் திருமஞ்சனம் செய்தான்: சிவபெருமான் ஆதிசேடனைக் கொண்டு ஒற்றினார். என்ன என்ன செய்தும் வெப்பம் தணிய வில்லை. எண்ணாயிரம் முனிவர்கள், ஒவ்வொருவரும் இருபத்தொரு அறுகையிட்டு வைத்திருந்த நீர்க்குடங்களைத் தனித்தனியே சொரிந்தனர் அப்போது தான் வெப்பந்தணிந்து. விநாயகருக்கு மட்டுமல்ல, மண்ணவருக்கும், விண்ணவருக்கும், முனிவருக்கும், தேவருக்கும் வெப்பம் நீங்கி, வேதனை நீங்கி, நிம்மதியாகவும், நிர்ப்பயமாகவும் வாழ்ந்தார்கள்.

மற்றொன்று, அறுகம்புல்லுக்கு ஈடுதேடிய வரலாறு, சோலைவனம் நிறைந்த தாபரம் என்ற அழகிய நகரத்தின் தென்திசையில் பனை மரங்கள் நிறைந்த தோப்பும், ஓடக்கரையும் உண்டு, அந்த ஓடக்கரையில் “கவுண்டின்யர்” என்ற தவமுனிவர் ஆசிரமம் அமைத்து தன் தர்மபத்தினியுடன் வாழ்ந்து வந்தார். அவரது பத்தினி ஆசிரியை, படிதாண்டாப்பத்தினி. முனிவர் தன் ஆசிரமத்தில் கணேச மூர்த்தியை பிரதிஷ்டை செய்து, ஆயிரக்கணக்கான அறுகுகளால் அர்ச்சனை செய்துவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கணவர் நாள்தோறும் அறுகுகளைக் கொண்டே ஆனைமுகனுக்கு அர்ச்சனை செய்து வருவதைக் கண்ட ஆசிரியை வியப்புடன் "நாதா, நறுமணம் கமழும் பற்பல மலர்கள் இருக்க, அவைகளை விட்டு ஆயிரக்கணக்கான அறுகம் புற்களால் விநாயகப்பெருமானை அர்ச்சனை செய்யக் காரணம் என்ன?! அதை அடியாளுக்குச் சொல்ல வேண்டும்" என்று கேட்டாள். முனிவர்..." பெண்ணே அந்த அறுகின் பெருமை அதிரகசியமானது, நீ பக்தியோடு கேட்பதால் அந்த வரலாற்றைக் கூறுகிறேன் கேள். மிதிலாபுரி எனும் திருநகர் உண்டு. அதை ஜனகமகாராஜன் எனும் மன்னன் மிகச்சீரும் சிறப்புமாக ஆண்டு வந்தான்.

அவன் நன்கு படித்தவன்,ஆனால் ஆணவம் பிடித்தவன், அபேத வாதத்தத்துவத்தால் தானே பரம்பொருள் என்றும் அகம்பாவம் கொண்டிருந்தான். திரிலோக சஞ்சாரியான நாரதர் ஒரு நாள் அங்கு வந்தார். மன்னன் தான்; என்ற மமதையால் அவரை மதிக்காமல் இருந்து விட்டான். அதைக் கண்டும் காணாதது போல் நாரதர், "பகவான் அனுக்கிரகத்தினால் பலதான கருமங்கள் செய்யும் உன்னுடைய செல்வம் மென்மேலும் வளரட்டும்." என்று வாழ்த்தினார். அவரை அலட்சியம் செய்த ஜனகமகாராஜன், "நாரதரே நானே யாவும்: நானே பகவான்" என்று கூறி அவரை ஏளனம் செய்தான். "புத்தியில்லாத புரவலனே....! பகவான் ஒருவன் இருக்கிறான், உன்னை வெட்கித்தலை குனிய வைக்கிறேன்" எனக் கூறிவிட்டு நாரத மகரிஷி அங்கிருந்து புறப்பட்டு கவுண்டின்ய மகரிஷியின் குடிசைக்கு வந்து, அவர் வணங்கும் விநாயகப் பெருமானிடம் முறையிட்டு விட்டுப் புறப்பட்டு விட்டார். மஹாகணபதியும் ஜனகமகாராஜனின் அகம்பாவத்தை நீக்கத் திருவுளங் கொண்டார்.

ஒருநாள் ஒரு ஏழைப் பிராமணராக வடிவெடுத்து பார்வைக்கு மிகவும் அருவருப்புக் கொண்ட தோற்றத்துடன் ஜனகன் அரண்மனை வாசலில் வந்து நின்றார். மன்னனும், "உமக்கு என்ன வேண்டும்.....? எதற்காக என்னை நாடி வந்தீர்....!" என்று கேட்டான். "அரசனே! முதலில் என் பசியை போக்க வேண்டும்." என்றார் வேதியர். உடனே மன்னன், "இந்த வேதியரின் பசி தீர நல்ல அறுசுவைப் பண்டங்களுடன். உணவு பரிமாறுங்கள்". எனப் பணித்தான். சகல அண்டங்களையும் தனக்குள் அடக்கிய விநாயகனுக்கு மன்னன் படைத்த உணவு போதுமா....! ஜனக மன்னன் ஆச்சரியத்தோடு அவர் அருகே வந்து, "பிராமணரே இனி உமக்குத்தர எதுவும் என்னிடம் இல்லை" என்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது கேட்ட வேதியர்,சிரித்து கூச்சலிட்டு "ராஜாதி ராஜனே, உன் சொல்லும், செயலும் வெகு அழகு. பரப்பிரம்மமும் நானும் வேறல்ல என மார்தட்டுவாயே என் பசியைப் போக்க வழியில்லாமல் வெறும் வயிற்றுடன் போகச் சொல்கிறாயே உனக்கு வெட்கம் இல்லையா! நீயா பரப்பிரம்மம்" என்று கூறிவிட்டு வெளியேறினார். அங்கிருந்து, அந் நகரிலுள்ள திரிசுரன் எனும் ஏழைப்பிராமணன் வீட்டுக்குப்போனார். அவர் அங்கு போன சமயம் திரிசுரன் தன் பத்தினி விரோசனை பணிவிடைகள் செய்ய பிள்ளையாருக்குப் பூசை செய்து கொண்டிருந்தான்.வேதிய வேடதாரி அவனைக்கனிவோடு நோக்கி, "அன்பனே! எனக்கு மிகவும் பசி, ஜனகன் அரண்மனை சென்றும் பசிதீரவில்லை, அதனால் கும்பிட்டு கண்ணீர் மல்க, "சுவாமி பிள்ளையாருக்கு பூசை செய்து ஏஞ்சிய இந்த அறுகம் புல்லைத் தவிர தானியமென்று தருவதற்கு எதுவுமில்லை" என்று தம் வறுமை நிலையைத் தழுதழுக்கும் குரலில் கூறினாள். "பெண்ணே! அற்பமான ஒரு புல்லை எனக்கு

எப்படித்தருவது என யோசிக்காமல் அன்புடன் அதைக்கொடுக்கலாம், "என்று கூறியபடி அதை வாங்கி வாயில் போட்டு மென்று தம் தொந்தியைத் தடவிக்கொடுத்து பெரிய ஏப்பம் விட்டார். அவருடைய அகோரப்பசி நீங்கி வயிறு நிரம்பிவிட்டது அவருடைய கருணையினால் மிதிலாபுரியெங்கும், நாடுகளிலும், வீடுகளிலும் பொன்னும், பொருளும் நிரம்பி வழிந்தது திரிசுரனும், விரோசனையும் வியப்பில் ஆழ்ந்தனர் எனக்கூறினார் கவுண்டின்ய மகரிஷி.

ஆசிரியை அவரை நோக்கி, "சுவாமி மிதிலாபுரி திரிசுரனை விட அளவற்ற அறுகுகளால் ஆனைமுகனுக்கு அர்ச்சனை செய்து வருகின்றோம். இருந்தும் நமக்கு மட்டும் ஏன் நற்பேறு நல்காமல் இருக்கிறார்? எனக் கேட்டான். நினைத்தவுடனேயே எச்செல்வத்தையும் அடையக்கூடிய கவுண்டின்ய முனிவர், புன்னகையுடன், இந்த உலக மக்கள் யாவரும் அறுகின் அருமை, பெருமைகளை அறியவும், நற்பேறு அடையவும் வேண்டும் என்ற எண்ணத்துடன், "பெண்ணே நான் தரும் அறுகை எடுத்துச் சென்று தேவந்திரனிடம் கொடுத்து அதன் எடைக்கு எடை பொன் கேட்டு வாங்கி வா" எனக் கூறி அறுகம்புல் ஒன்றை ஆசிரியையிடம் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ரிஷி பத்தினி அதை எடுத்துச் சென்று தேவேந்திரனிடம் கொடுத்து விபரத்தை கூறினாள். இந்திரன் அதை அதிசயமாகக் கருதி ரிஷி பத்தினியை வணங்கி, "தாயே! நீ குபேரனிடம் சென்று இதற்கு சமனான பொன்னைப் பெற்றுச் செல்லலாம்" என்றான். ரிஷி பத்தினியைக் கண்ட குபேரன் அவரைப் பணிவோடு வணங்கினான். அவன் கொடுத்த அறுகம்புல்லையும் கூறிய விபரத்தையும் கேட்டு அவன்முன் ஏராளமான பொன்னைக் குவித்து "தாயே உனக்கு தேவையான அளவு எடுத்துச்செல்லலாம் என்றான்.

"'குபேரனே! நான் கொண்டு வந்த இந்த அறுகின் எடைக்குச் சமமான பொன்னை மட்டும் வாங்கி வரும்படியே என் கணவர் கூறியிருக்கிறார். இந்த அறுகைத் தராசில் வைத்து அதற்கிணையான பொன்னைத் தரவேண்டும்" என்றாள். குபேரனும் அதற்கிணங்கி ஒரு தராசுத் தட்டில் அந்த அறுகை வைத்து கொஞ்சம் கொஞ்சமாக மறுதட்டில் பொன்னை வைத்தும் தட்டு தங்கம் வைத்த பக்கம் தாழவே இல்லை. இந்த விசித்திர வினோதத்தைக் கண்ட குபேரன், தன் வேலையாட்களிடம் இந்த அறுகு மிகவும் தெய்வீகமானது" என்றான். குபேரன் குழம்பினான், திகைப்பும், பெருவியப்பும் அடைந்தான் தன் அழகாபுரியில் காணப்பட்ட அத்தனை செல்வங்களையும் வைத்தான். புல்லிருந்த தராசுத் தட்டு அசையவேயில்லை. தராசுத் தட்டை வணங்கி விட்டு தானும் தன் மனைவியுடன் தட்டில் ஏறி நின்றான். தராசு சிறிது கூடத் தாழாமல் அப்படியே நின்றது. இந்த அதிசயத்தை கேள்விப்பட்ட தேவேந்திரன் தனது நகரத்திலுள்ள அனைத்து நிதிகளையும் எடுத்து வரச்செய்து, அறுகம்புல்லுக்கு ஈடுருகு ஏறிநின்றனர் அடுத்து தட்டு அசையவேயில்லை, அது ஆனைமுகப்பெருமானை அர்ச்சித்த அறுகி என அறிந்து முப்பத்து முக்கோடி தேவர்களும் திரண்டு ரிஷி பத்தினியுடன் கவுண்டின்ய மகரிஷியின் ஆசிரமம் வந்தார்கள். அதை கண்டு மகரிஷி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கரங்களைத் தலைக்கு மேல் தூக்கித் தாழ்ந்து வணாங்கினார். அவர்களைப் பலமுறை வலம் வந்தார்.

ஆண்டவனே! அடியார்க்கும் அடியவனான அடியேன் ஆனைமுகனுக்கு அர்ச்சனை செய்த அறுகின் அருமைபெருமைகளையும், மகிமையையும் எல்லோரும் அறியவேண்டும் என்பதற்காகவே இதைச் செய்தேன். "எனக் கூறிக்கொண்டு சாஸ்டாங்கமாக விழுந்து வணங்கினார். தேவர்களும், மூவர்களும் அவருக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து விட்டு வாழ்த்திச் சென்றனர் அறுகம்புல்லின் மகிமை வாழ்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகப் பெருமானின் திருவுருவ விளக்கம்

**திருவடி**

ஆன்மாவைப் பொருந்தி நின்று மலகன்ம மாயைகளை தொழிற்படுத்தி இருமை இன்பத்தை அளிப்பது ஞானம். இந்த நானமே விநாயகரின் திருவடிகளா இருக்கின்றன.

**பெருவயிறு**

ஆகாசம் எல்லாப் பொருள்களும் தன்னகத்து ஒடுங்கவும், உண்டாகவும் இடந்தந்து இருப்பது போலப் பெருவயிறாகிய ஆகாசமும் எல்லா உலகங்களும் உயிர்களும் தம்முள் அடங்கியிருக்கின்றன என்பதைக் குறிப்பிடுகின்றது.

**ஐந்துகரங்கள்**

பிள்ளையாரின் ஒருகை பாசத்தை ஏந்தியுள்ளது. அது படைத்தலைக் குறிக்கிறது. எனவே இவரே பிரம்மாவாகிறார். தந்தம் ஏந்திய கை காத்தலை குறிக்கிறது. எனவே இவரே மகாவிஷ்ணுவாகிறார். துதிக்கை அனுக்ரகம் செய்கிறது. அங்குசம் ஏந்திய கை அழித்தலை குறிக்கிறது எனவே இவர் ருத்ரர் ஆகிறார். மோதகம் ஏந்திய கை அருளைக் குறிக்கிறது எனவே இவரே சர்வசக்தி படைத்த பரமேஸ்வரனாகவும் இருக்கிறார்.

**கொம்புகள்**

மகாபாரதத்தை எழுதுவதற்காக தமது கொம்பையே ஒடித்தது வெளித்தோற்றத்தைவிட அறிவுக்கு முன்னுரிமை தர வேண்டியதை உணர்த்துவதாகக் கூறப்படுகின்றது.

**தாழ்செவி**

விநாயகரின் முறம் போன்ற பெரிய காதுகள் செவியில் விழும் செய்திகளை சலித்து நல்லவற்றை மட்டும் தேர்ந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பதைக் குறிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாட்டிற்குரிய இருபத்தியொரு பச்சிலைகளும் அதன் பயனும்

01. முல்லை இலை :- அறம்வளரும்

02. கரிசலாங்கண்ணி இலை :- இல்வாழ்க்கைக்குத் தேவையான பொருள் சேரும்

03. விஸ்வம் இலை :- இன்பம், விரும்பியவை அனைத்தும் கிடைக்கும்.

04. அருகம்புல் :- அனைத்து சௌபாக்கியங்களும் கிடைக்கும்.

05. இலந்தை இலை :- கல்வியில் மேன்மையை அடையலாம்.

06. ஊமத்தை இலை :- பெருந்தன்மை கைவரப் பெறும்.

07. வன்னி இலை :- பூவுலக வாழ்விலும், சொர்க்க வாழ்விலும் நன்மைகள் கிடைக்கப் பெறும்.

08. நாயுருவி :- முகப் பொலிவும், அழகும் கூடும்.

09. கண்டங்கத்திரி :- வீரமும், தைரியமும் கிடைக்கப் பெறும்.

10. அரளி இலை :- எந்த முயற்சியிலும் வெற்றி கிடைக்கும்.

11. எருக்கம் இலை :- கருவிலுள்ள சிசுவுக்கு பாதுகாப்புக்கிடைக்கும்.

12. மருதம் இலை :- மகப்பேறு கிடைக்கும்.

13. விஷ்ணு கிராந்தி இலை :- நுண்ணிவு கை வரப்பெறும்.

14. மாதுளை இலை :- பெரும் புகழும் நற்பெயரும் கிடைக்கும்.

15. தேவதாரு இலை :- எதையும்தாங்கும்மனோ தைரியம்கிடைக்கும்.

16. மருக்கொழுந்து இலை :- இல்லற சுகம் கிடைக்கப் பெறும்.

17. அரசும்இலை :- உயர்பதவியும், பதவியால்கீர்த்தியும்கிடைக்கும்.

18. ஜாதிமல்லி இலை :- சொந்த வீடு, மனை, பூமி பாக்கியம் கிடைக்கப் பெறும்.

19. தாழம் இலை :- செல்வச் செழிப்புக் கிடைக்கப் பெறும்.

20. அகத்தி இலை :- கடன் தொல்லையிலிருந்து விடுதலை கிடைக்கும்.

21. தவனம்ஜகர்ப்பூரஸ இலை :- நல்ல கணவன், மனைவி அமையப் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகரின் 32 வடிவங்கள் மற்றும் அதன் தத்துவங்களும்

**பால கணபதி**



பெயர் குறிப்பிடுவதுபோல, பாலா கணபதி என்பது விநாயகரின் குழந்தைவடிவமாகும். இது பூமியின் மிகுதியையும் வளத்தையும் குறிக்கிறது, ஏனெனில் அவர் தனது நான்கு கைகளிலும் ஒரு வாழைப்பழம், மா, கரும்பு மற்றும் பலாப்பழத்தை வைத்திருக்கிறார். அவருக்கு பிடித்த இனிப்பு “மோதகம்” சுற்றி அவரது தண்டு சுருண்டுள்ளது.

**தருண கணபதி**



தருண கணபதி அவரது பதின்பருவத்தில் இருக்கிறார். மற்றும் இளமையைக் குறிக்கிறது. (அவரது உடல் சிவப்புநிறத்தில் ஒளிரும்). இந்த வடிவத்தில் விநாயகரின் 8 கைகள் உள்ளன, ஒவ்வொன்றும் ஒரு மோதகம், சத்தம், ஆடு, மரஆப்பிள், ரோஸ் ஆப்பிள், தண்டு, சில நெல் மற்றும் கரும்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

**பக்தி கணபதி**



பக்தி கணபதி என விநாயகர் தனது நான்கு கைகளிலும் ஒரு வாழைப்பழம், ஒருமா, தேங்காய் மற்றும் இனிப்பு பாயாசம், புட்டு ஒரு கிண்ணத்தை வைத்திருக்கிறார். இந்த வடிவத்தின் தெய்வீக பார்வை ஒரு பௌர்ணமி போல் பிரகாசிக்கிறது. மற்றும் பொதுவாக அறுவடை காலத்தில் விவசாயிகளால் வணங்கப்படுகிறது.

**வீரா கணபதி**



வீரா கணபதி 16 ஆயுதமேந்திய போர்வீரன், அவரது கைகளில் ஆயுதங்களை வைத்திருக்கிறான் - தீமை மற்றும் அறியாமைமீது விநாயகரின் வெற்றியைக் குறிக்கிறது.


**சக்தி கணபதி**




இந்த வடிவத்தில் விநாயகர் ஒரு பாதுகாவலனாக இருப்பதால், அவரது “சக்திகளில்” ஒன்று அவன் மடியில் அமர்ந்திருக்கிறது. மறுபுறம், சக்திகணபதி ஒரு “அபயாமுத்திரா” வைத்திருக்கிறார். அவருடைய பக்தர்கள் அனைவருக்கும் ஆசீர்வாதம் அளிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துவிஜ கணபதி**




இந்த நான்கு தலைகள் கொண்ட திவிஜ கணபதி செல்வத்துக்காகவும் அறிவுக்காகவும் வணங்கப்படுகிறது. "திவ்ஜா" என்றால் இரண்டு முறை பிறந்தவர். இந்தவடிவத்தில் விநாயகர் ஒரு "காமண்டலு", ருத்ராட்சா, ஒரு பணியாளர் மற்றும் ஒரு இலை வசனத்தை வைத்திருக்கிறார்.

**சித்தி கணபதி**




தங்க மஞ்சள் நிறத்தில் ஒளிரும் சித்தி கணபதி புத்தி மற்றும் வெற்றியின் மாஸ்டர். நிதானமான நிலையில் அமர்ந்து, விநாயகரின் இந்த வடிவம் ஒரு பூச் செண்டு, ஒரு கோடரி, மா, கரும்பு மற்றும் அவரது உடற் பகுதியில் ஒரு மோதகம் வைத்திருக்கிறது

**உச்சிஷ்ட கணபதி**



உச்சிஷ்ட கணபதி "ஆசீர்வதிக்கப்பட்ட பிரசாதங்களின் இறைவன்" என்று அழைக்கப்படுகிறார். மேலும் கலாச்சாரத்தின் பாதுகாவலர் ஆவார். படைப்பாற்றலின் "சக்தி" அவரது மடியில் அமர்ந்து அவரது கைகள் வீணா, ஒரு நீல தாமரை, மாதுளை, தியான மணிகள் மற்றும் நெல் தண்டு ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

**விக்ன கணபதி**



விக்னா கணபதி என்றால் தடைகளை நீக்குபவர் என்று பொருள். விஷ்ணுவைப் போலவே விநாயகரின் இந்த எட்டு ஆயுத வடிவமும் அவரது இரண்டு கைகளில் ஒரு சங்குவையும் சக்ராவையும் கொண்டுள்ளது. மற்றவர்களில், அவர் ஒரு சத்தம், ஆடு, தண்டு, மோதகம், பூச்செண்டு, கரும்பு, மலர், அம்பு மற்றும் கோடாரி ஆகியவற்றை வைத்திருக்கிறார்.

**க்ஷிப்ர கணபதி**



கிஷிப்ரா கணபதி வரங்களை வழங்குபவர் என்று நம்பப்படுகிறது. இந்த வடிவத்தில் விநாயகர் தனது பக்தர்களின் விருப்பங்கள் விரைவாக நிறைவேற்றுவதாக அறியப்படுகிறார். அவர் கலப்பவ்ரிக்ஷா (ஆசை நிறைவேற்றும்) மரத்தின் ஒரு சத்தம், ஆடு மற்றும் ஒரு முளை ஆகியவற்றைக் கொண்டு செல்கிறார். நகைகள் ஒரு பானை அவரது உடற்பகுதியில் சுருண்டு கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹேரம்ப கணபதி**




விநாயகர் ஐந்து முகம் கொண்ட பாதுகாவலர். இந்த வடிவத்தில் சிங்கத்தை சவாரி செய்யும் ஹெராம்ப கணபதி. அவர் தனது பத்து கைகளில் எட்டுகளில் ஒரு கோடாரி, சுத்தி, சத்தம், மணிகள், உடைந்த தண்டு, மாலை, பழம் மற்றும் மோதகம் ஆகியவற்றைக் கொண்டு செல்கிறார்.

**லட்சுமி கணபதி**



இந்த வடிவத்தில் விநாயகரின் மடியில் அமர்ந்திருக்கம் அவரது சக்தி புத்தியும், சித்தியும் உண்மையில் ஞானமும் சாதனையும்தான். அவரது இரண்டு கைகள் வரதா மற்றும் அபயாமுத்ராஸை சைகை செய்கின்றன. மற்ற கைகள் பச்சைகிளி, ஒரு மாதுளை, ஒருவாள், ஒரு சத்தம், யானை, ஆடு, கல்பவ்ரிக்ஷதவின் முளை (விருப்பத்தை நிறைவேற்றும் மரம்) மற்றும் நீர்பாத்திரம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. அவரது சக்திகள் இரண்டும் வெள்ளை தாமரை மலர்களைக் கொண்டுள்ளன.

**மகா கணபதி**



விநாயகரின் மிகவும் பொதுவாக வணங்கப்படும் வடிவம் மகா கணபதியை வழிபடுபவர்கள் புத்தி, செழிப்பு மற்றும் தீமையிலிருந்து பாதுகாப்பைப் பெறுவார்கள் என்று நம்பப்படுகிறது. அவரது ஒரு சக்தியுடன் ஒன்றாக அமர்ந்திருக்கும் மகா கணபதி அவரது உடைந்த தண்டு, நீல நிற அல்லி, தாமரை, ஒரு மாதுளை, கரும்பின் தண்டு, நெல் மற்றும் ஆயதங்களை வைத்திருக்கிறார்.

**விஜய கணபதி**



விஜயம் என்றால் வெற்றி என்று பொருள். மூஷிகா (அவரது வாகன சுட்டி) மேல் அமர்ந்து, விஜய கணபதி இருண்ட சக்திகளை அழிப்பவர். அவரது நான்கு கரங்களும் உடைந்த தண்டு, சத்தம், ஆடு, பழுத்த மாம்பழம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிருத்திய கணபதி**



ஒரு தங்க பிரகாசத்துடன், நிருத்ய கணபதி நடனக்கலைஞர் மகிழ்ச்சியுடன் துடிப்பானவர்! கல்பவ்ரிக்ஷா (ஆசை நிறைவேற்றும்) மரத்தின் கீழ் நடனமாடும் அவர், விரல்களில் மோதிரங்களை அணிந்து கொள்கிறார், அதே நேரத்தில் நான்கு கரங்களும் தண்டு, சத்தம், ஆடு, மோதகம் ஆகியவற்றை தாங்குகின்றன.

**ஊர்த்துவ கணபதி**



உர்தவ கணபதி என்பது அவரது சக்தியுடன் தாந்த்தீக நிலையில் அமர்ந்திருக்கும் உயர்த்தப்பட்டவர். அவரது ஆறு கைகளில் ஒவ்வொன்றும் தாமரை, நெல், கரும்பு, ஒரு அம்பு, உடைந்த தண்டு, மற்றும் நீல அல்லி ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**ஏகாட்சர கணபதி**



பத்மஷன போஸில் அவரது தெய்வீக வாகனமான மூஷிகா மீது அமர்ந்து, ஏகாக்ஷர கணபதி விநாயகரின் நான்கு ஆயுதங்கள் மற்றும் மூன்று கண்கள் கொண்ட வடிவம், அவர் கையில் ஒரு சத்தம், ஆடு மற்றும் ஒரு மாதுளை வைத்திருக்கிறார்.

**வரத கணபதி**



வரத கணபதி தனது பக்தர்களின் விருப்பங்களை நிறைவேற்றுகிறார். அவரது தந்தை சிவனைப் போலவே, வரத கணபதியும் ஞானத்தின் மூன்றாவது கண்ணையும், தலைக்கு மேல் பிறை நிலவையும் கொண்டவர். அவர் தனது கைகளில் ஒரு சத்தம், ஆடு, தேன்டிஷ் மற்றும் நகைகளை வைத்திருக்கிறார்.

**த்ரயக்ஷர கணபதி**




த்ரியக்ஷர கணபதி AUM இன் இறைவன். உடைந்த தண்டு, ஆடு, சத்தம் மற்றும் மாம்பழத்தை அவர் கையில் சுமக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிப்ரப்ரசாத கணபதி**



விநாயகரின் இந்த வடிவம் குஷாபுல் சிம்மாசனத்தில் உள்ளது. அவர் தனது பக்தர்களின் விருப்பங்களை விரைவாக நிறைவேற்றுகிறார். ஆனால் எந்தவொரு தவறுகளையும் விரைவாக தண்டிப்பார். அவரது பெரிய வயிறு பிரபஞ்சத்தை குறிக்கும். அதே வேளையில் அவரது கைகள் உடைந்த தந்தத்தைத் தாங்கும் போது கல்பவ்ரிக்ஷதவின் கிளை, சத்தம், ஒரு யானை ஆடு, மாதுளை மற்றும் ஒரு வெள்ளை தாமரை

**ஹரித்ரா கணபதி**



அரச சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் இந்த அமைதியான முகம் கொண்ட ஹரித்ரா கணபதி தங்க மஞ்சள் நிற உடையில் அணிந்திருந்தார். மற்றும் ஆபரணங்கள் உடைந்த தண்டு, மோதகம், சத்தம் மற்றம் ஒரு ஆடுகளை அவரது கைகளில் வைத்திருக்கின்றன.

**ஏகாதந்த கணபதி**



மற்ற வடிவங்களுடன் ஒப்பிடும் போது, ஏகாதந்த கணபதி ஒரு பெரிய வயிற்றைக் கொண்டிருக்கிறார். மேலும் அவரது உடைந்த தண்டுக்கு பெயர் பெற்றவர். அறியாமையின் பிணைப்பை வெட்ட அவரது கைகள் உடைந்த தண்டு, லாடு, ஜெபமணிகள் மாலா மற்றும் ஒரு கோடாரி ஆகியவற்றைப் பிடிக்கின்றன.

**கிருஷ்டி கணபதி**



ஸ்ரீஷ்டி கணபதி என்பது விநாயகரின் மகிழ்ச்சியான வடிவம். அவர் ஒரு சத்தம், ஒரு ஆடு, ஒரு சரியானமா மற்றும் அவரது தந்தத்தை வைத்திருக்கிறார். இது தன்னலமற்ற தியாகத்தைக் குறிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உத்தண்ட கணபதி**



உத்தந்த கணபதி நீதியைச் செயல்படுத்துகிறது. அவரது ஒரு சக்தியுடன் சேர்ந்து, இது விநாயகரின் கோபமான வடிவம். அவரது பத்து கைகளில், அவர் ஒரு பானை நகைகள், ஒரு நீல அல்லி, கரும்பு, மெஸ், தாமரை மலர், நெல், மாதுளை, சத்தம், மாலை மற்றும் அவரது உடைந்த தண்டு ஆகியவற்றைக் கொண்டு செல்கிறார்.

**ருணமோசன கணபதி**



ரினாமொசன கணபதி தனது பக்தர்களை குற்ற உணர்ச்சியிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் "மோக்ஷம்" கொடுத்து விடுவிக்கிறார். அவர் தனது நான்கு கைகளில் ஒரு சத்தம், ஆடு, ரோஜா அப்பிள் மற்றும் உடைந்த தந்தத்தை பயன்படுத்துகிறார்.

**துண்டி கணபதி**



துந்த் என்றால் தேடல் என்று பொருள். பக்தர்கள் கோரிய விநாயகரின் வடிவம் இது. அவர் விழிப்புணர்வின் சின்னம். துந்தி கணபதி ருத்ராட்சாமணிகள், அவரது உடைந்த தண்டு, ஒரு கோடாரி மற்றும் ஒரு சிறிய பானை நகைகளை வைத்திருக்கிறார்.

**திவிமுக கணபதி**



இந்த வடிவத்தில் விநாயகர் இரண்டு முகங்களைக் கொண்டிருக்கிறார். அவரை எல்லா திசைகளிலும் பார்க்க முடிகிறது. திவிமுக கணபதியின் நான்கு கைகள் ஆடு, சத்தம், ஒரு பானை கற்கள் மற்றும் அவரது தியாகம் ஆகியவற்றைக் குறிக்கின்றன.

**துவிமுக கணபதி**



அவரது பெயரைப் போலவே விநாயகரின் இந்த வடிவம் மூன்று முகம் கொண்டது. மற்றும் அவரது பக்தர்களுக்கு பாதுகாப்பையும் ஆசீர்வாதத்தையும் அளிக்கிறது. ஒரு தங்கத் தாமரையின் மீது தங்கியிருக்கும் இந்த ஆறு ஆயுத திரிமுக கணபதி ஒரு சத்தம், ஆடு, மணிகள் மற்றும் ஒரு பானை தேன் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்ஹ கணபதி**



சின்ஹா கணபதி பயம் மற்றும் தைரியத்தை குறிக்க சிங்கங்களை சவாரி செய்து வைத்திருக்கிறார். அவர் ஒரு கல்பவ்ரிக்ஷா (ஆசை நிறைவேற்றும் மரம்) ஸ்பரிக், வினா, தாமரை மலரும், மலர் பூச்சண்டு மற்றும் ஒரு பானை நகைகளையும் கொண்டு செல்கிறார்.

**யோக கணபதி**



பெயர் குறிப்பிடுவது போல விநாயகர் இந்த வடிவத்தில் ஒரு யோகியை ஒத்திருக்கிறார். காலை சூரியனைப் போல ஒளிரும் யோக கணபதி தியானம் செய்வதைக் காணலாம், அதே நேரத்தில் அவரது கைகள் கரும்பு, ஒரு ஊழியர்கள், பிரார்த்தனை மணிகள் மற்றும் ஒரு சத்தத்தை வைத்திருக்கின்றன.

**துர்க கணபதி**



துர்கா கணபதி என விநாயகர் இருள் மீது வெற்றியைக் குறிக்கிறது. இந்த வடிவத்தில் அவர் ஒருவில், அம்பு, சத்தம், ஆடு, பிரார்த்தனை மணிகள், உடைந்த தண்டு மற்றும் ரோஜா அப்பிள் ஆகியவற்றை தனது கைகளில் தாங்குகிறார்.

**சங்கதஹர கணபதி**



சங்கதஹர கணபதி அனைத்து வகையான துக்கங்களையும் சிரமங்களையும் நீக்குகிறது. விநாயகர் இந்த வடிவத்தில் ஒரு சிவப்பு தாமரையின் மீது அமர்ந்திருக்கும் போது அவர் கைகளில் சத்தம், ஆடு மற்றும் ஒரு கிண்ணம் பாயசம் ஆகியவற்றைக் கொண்டு செல்கிறார். பக்தர்களுக்கு ஆசீர்வாதம் அளிக்க அவரது வலது கை வரத முத்ராவைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நின்ற பற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப்பிறவி மயக்கம் அறுத்து
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே எந்தன் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைத்தான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவிகள் ஒடுங்கும் கருத்தறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேரா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவிலுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலதாரத்து மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்ஷமமும்
என் முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித்து எனக் கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடமென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்தரும் ஆனந்தத்து அமுத்தி என்செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் கலைந்து அருள் வழிகாட்டி
சத்தத் தினுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத் தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்து
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

*********


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால் உதிக்கும் நன்றி பூக்கள்

கல்முனை நகர் பதியில் வடக்கு பிரதேச செயலக வளாகத்தினில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரிகின்ற ஸ்ரீ வரசித்தி விநாயகர் பெருமானுக்கு கும்பாபிஷேக குடமுழுக்கு நிகழ்வானது 31-08-2020 ஆம் திகதி மிகவும் சிறப்பான முறையிலேயே நடைபெற்றிருந்தது.

ஆலயங்கள் என்பது ஆன்மாவினை வழிப்படுத்துகின்ற மையமாக காணப்படுகின்றது. அந்த வகையில் மக்கள் வாழ்விடங்கள் தோறும் வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்படுவது ஆன்ம ஈடேற்றத்திற்கான வழிமுறை என்பதனை நாம் புரிந்து கொள்ள முடியும். இதனை நோக்காக கொண்டு எமது பிரதேச செயலக வளாகத்திலும் இந்த ஆலயமானது புதுப் பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தினை அமைப்பதற்குரிய அடித்தளத்தினை இட்டவர் என்ற வகையில் முன்னாள் பிரதேச செயலாளர் திரு. க. லவநாதன் அவர்களை குறிப்பிடுவதுடன் முதல் நன்றிகளையும் குறிப்பிடுகின்றோம். அது போல குறுகிய காலமே எம்மோடு இணைந்து பணியாற்றினாலும் அக்காலப்பகுதியில் ஆலயப்பணிகளில் முழுமையான தனது பங்களிப்புக்களை நல்கிய முன்னாள் பிரதேச செயலாளர் அமரர் திருவாளர் சீ. ஜெயரூபன் அவர்கது ஆன்மா ஈடேற்றத்தினை வேண்டியவர்களாக அன்னாரினையும் நினைவு கூறுவதுடன் இதன் பின் பிரதேச செயலாளராக கடமையேற்ற எமது பிரதேச செயலாளர் திரு. ரி.ஜே.அதிசயராஜ் அவர்களது அயராத முயற்சியினாலும் வழிகாட்டுதலாலும் இவ்வாலயமானது புதுப் பொலிவுடன் அமைக்கப்பட்டு குடமுழுக்கு கண்டுள்ளது. எனவே இக் கைங்காரியத்தினை உயர்வான பணியாக கருதி நிறைவேற்றிய அன்னாருக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இக்கும்பாபிஷேக நிகழ்வினை இறையாசியுடன் சிறப்புற நிகழ்த்தி தந்த கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ.க.கு.சச்சிதானந்த சிவம் குருக்கள் அவர்களுக்கும் அவரது குழுவிற்கும், மற்றும் கும்பாவிஷேக சிறப்பு மலரிற்கு ஆசிச் செய்திகளை வழங்கிய சிவஸ்ரீ.க.கு.சீதாராம் குருக்கள் அவர்களுக்கும் உளம் நிறைந்த நன்றிகளை பகிர்கின்றோம். மேலும் கும்பாபிஷேக மலரிற்கு வாழ்த்து செய்திகளை வழங்கிய அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டி.எம்.எல். பண்டாரநாயக்க மற்றும் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. வே.ஜெகதீசன் ஆகியோருக்கும் நன்றிகளை பெருமிதத்துடன் உரைக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய கட்டுமானப் பணிகளின் போது அர்ப்பணிப்புடன் தமது பணியினை நிறைவேற்றிய ஆச்சாரியார் திரு. ஞ. ஆனந்தராஜா, வர்ணக்கலைஞர் திரு. த. நந்தகுமார், சிற்பக்கலைஞர் திரு. க. நவமணி ஆகிய கலை படைப்பாளிகளுக்கும் எமது மெச்சுதல்களை தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த திருப்பணிகளானது இனிதே நிறைவு பெற அனைத்து வழிகளிலும் உதவிகள் நல்கிய பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நலன்விரும்பிகள் மற்றும் ஆலய நீதி மன்ற வழக்கின் போது சட்ட ரீதியான பங்களிப்புக்களை வழங்கிய சட்டத்தரணிகள் ஆகிய நல்லுள்ளங்கள் அனைவருக்கும் மனம்நிறைந்த நன்றிகளை பகிர்கின்றோம். அத்தோடு இறைபணியில் எம்மோடு கரம் கோர்த்து செயற்பட்ட மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கு. ஜெயராஜி மற்றும் ஆலயங்களது பரிபாலன சபையினர், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் போன்ற அனைவருக்கும் இறையாசியுடனான நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் நன்றியறிதலில் யாரேனும் விடுபட்டிருந்தால் தங்களுக்கான நன்றியறிதலாக பெருமனதுடன் இதனை ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் வேண்டி விடைபெறுகின்றோம்.


**"அன்பினால் செய்யப்படும் ஒவ்வொரு விடயமும்**
**ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும்"**

- சுவாமி விவேகானந்தர் -

**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம்,**
**கல்முனை வடக்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

01. சிவாகம விதிமுறைகள்
02. இந்துப் பண்பாடுகள்
03. விநாயகர் வழிபாட்டு அம்சங்கள்
04. கும்பாபிஷேக விளக்கம்
05. தெய்வத்திரு மேனிகளின் ரூபம், ஜந்திரம், தியானம்

"மனிதனை பண்புள்ளவனாகவும் பண்புள்ளவனை
தெய்வமாகவும் மாற்றுவதே ஆலயம்"

*- சுவாமி விவேகானந்தர் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org